Registered as a news paper. பக்கங்கள்: பத்து

# நமது ஈழநாடு

**தமிழர் தாயகத்தின் முன்னோடி நாளிதழ்**

**IIS**

**புலமைப்பரிசில் திட்டம் 2004**

கல்வியாண்டு 2004/2005 இல் புலமைப்பரிசில் திட்டம் 2004 இன் ஊடாக எமது நிறுவனத்தில் கல்வி பயிலவிரும்பும் மாணவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

விண்ணப்ப முடிவு திகதி : 15.11.2003

விண்ணப்பப் படிவங்களினை IIS அலுவலகங்களிலும் குடாநாட்டின் அனைத்துப் புத்தகசாலைகளிலும் பெற்றுக்கொள்ளலாம்.

மலர் : 02 திருவள்ளுவர் ஆண்டு: 2034 ஐப்பசி 12 ஆம் நாள், ஹிஜ்ரி 1425 றம்ழான் 03 (29.10.2003) புதன்கிழமை இதழ் :29

# ஜனாதிபதியின் கடிதத்தால் நெருக்கடி வலுக்கிறது; கன்காணிப்புக்குழுத் தலைவர் நாடு திரும்புகிறார்!

## நோர்வே அரசுடன் விரிவான பேச்சு நடைபெறும்

(கொழும்பு)

**போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழுவின் தலைவர் ஜெனரல் ட்ரைகேவ் ரெலவ்சன், நோர்வேக்குத் திரும்பி, தற்போதைய நெருக்கடி நிலை குறித்து அந்த நாட்டு அரசாங்கத்துடன் பேச்சுக்களை நடத்தவுள்ளார்.**

கண்காணிப்புக்குழுவின் தலைவர் ரெலவ்சன் விடுதலைப் புலிகளுக்குச் சார்பாக நடப்பதாகச் சந்தேகிப்பதாகவும், நாட்டின் இறைமைக்குப் பாதிப்பு ஏற்படும் வகையில் இவர் செயற்படுவதாகவும் குறிப்பிட்டு, கடந்த 23 ஆம் திகதி நோர்வே பிரதமர் கஜெல் மெக்னே பொண்டவிக்குக்கு ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க அவசர கடிதம் அனுப்பிவைத்திருந்தார்.

இந்தக் கடிதத்தில் ஜெனரல் ரெலவ்சனை உடனடியாகப் பதவி நீக்குமாறும் அவர் கோரியிருந்தார். இந்த நெருக்கடியான சூழ்நிலையில் தான் போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழுவின் தலைவர் ஜெனரல் ரெலவ்சன் பேச்சுக்களை நடத்துவதற்காக நோர்வே திரும்பவுள்ளார்.

இன்று அல்லது நாளை அவர் நோர்வேக்குத் திரும்பிச்செல்லலாம் என கண்காணிப்புக்குழு அதிகாரிகள்

(10 ஆம் பக்கம் பார்க்க)

## ரெலவ்சனின் விசாரணை அறிக்கை இன்று அமைச்சரவையில் சமர்ப்பிப்பு!

(கொழும்பு)

கண்காணிப்புக்குழுத் தலைவர் ரெலவ்சனை மீள அழைப்பது தொடர்பாக மேற்கொள்ளப்பட்டுவரும் விசாரணை அறிக்கை, இன்று அமைச்சரவையில் சமர்ப்பிக்கப்படவுள்ளது.

போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழுவின் தலைவரை மீள அழைக்குமாறு, ஜனாதிபதியால் நோர்வே பிரதமருக்கு கடிதம் அனுப்பியுள்ள நிலையில், பாதுகாப்பு அமைச்சர் திலக் மாரப்பன - கிழக்கு மாகாண கடற்படைத் தளபதிகள் மற்றும் போர்நிறுத்தக் கண்காணிப்புக்குழுவினர் ஆகியோருடன் இதுபற்றி பேச்சுக்களை நடத்தியுள்ளார். இது தொடர்பான அறிக்கை, இன்று அமைச்சரவையில் சமர்ப்பிக்கப்பட்டு தீர்மானம் ஒன்று எடுக்கப்படவிருப்பதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை, போர்நிறுத்தக் கண்காணிப்புக்குழுவின் ஆலோசனைகளைத் தாமும் கடைப்பிடிக்கப் போவதில்லை என, விடுதலைப் புலிகள் அறிவித்துள்ளனர். போர்நிறுத்

(10 ஆம் பக்கம் பார்க்க)

### விண்ணாணம் விநாசியர்



உந்த இழுபறியில ஆர் வெல்லப் போயினமோ....?

## மின்சாரம் தாக்கி சிறுவன் பலி!

(யாழ்ப்பாணம்)


அராலி மேற்கு - வட்டுக்கோட்டையைச் சேர்ந்த சிறுவனொருவன் மின்சாரம் தாக்கி உயிரிழந்தார்

நேற்றுமுன்தினம் நடந்த இந்தச் சம்பவத்தில், பற்குணராசா - தவரஞ்சன் (வயது 14) என்ற சிறுவனே உயிரிழந்தவராவார்.

நேற்று முன்தினம் அதிகாலை, பால் வாங்கச் சென்றவேளை இந்தச் சிறுவன் வீட்டில், சட்டவிரோதமான முறையில்- எடுத்த மின்

(10 ஆம் பக்கம் பார்க்க)

## தொண்டமான் - தமிழ்ச்செல்வன் கிளிநொச்சியில் நேற்று சந்திப்பு!



தமிழீழ அரசியற்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வனை, இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் தலைவர் ஆறுமுகம் தொண்டமான் தலைமையிலான குழுவினர் நேற்று சந்தித்து கலந்துரையாடினர்.

முற்பகல் 11.30 தொடக்கம் 12.40 வரை கிளிநொச்சியிலுள்ள சமாதான செயலகத்தில் இந்தச் சந்திப்பு நடைபெற்றது.(10 ஆம் பக்கம் பார்க்க)

## புலிகளால் சமர்ப்பிக்கப்படவுள்ள திட்டவரைபில் தாயகத்தின் அனைத்து சமூகங்களதும் பிரதிநிதித்துவம் பூர்த்தி செய்யப்படும்!

### கிளிநொச்சியில் அரசியற்துறைப் பொறுப்பாளர் தமிழ்ச்செல்வன் பேட்டி

(கிளிநொச்சி)

வடக்கு - கிழக்கிற்கான இடைக்கால நிர்வாகம் தொடர்பாக, விடுதலைப் புலிகளால் தயாரிக்கப்பட்ட திட்டவரைபில், அனைத்துச் சமூகங்களையும் பிரதிநிதித்துவப்படுத்துவதுடன், அவர்களது அபிலாஷைகளைப் பூர்த்திசெய்யும் வகையில் அமையுமென விடுதலைப் புலிகளின் அரசியற்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன் தெரிவித்தார்.

இ.தொ.கா தலைவரும், அமைச்சருமான ஆறுமுகம் தொண்டமானைச் சந்தித்தபின், ஊடகவியலாளருக்குக் கருத்துத் தெரிவிக்கையிலேயே, அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், எதிர்வரும் 31 ஆம் திகதி இடைக்கால நிர்வாக வரைபு நோர்வே அரசாங்கத்திடம் கையளிக்கப்பட்ட பின், அடுத்த மாதம் முதலாம் திகதி ஊடகங்கள் மூலம் அது வெளியிடப்படும்.

இது கையளிக்கப்பட்ட பின், முஸ்லிம் தரப்பினருடன் அதுபற்றி விரிவாகப் பேசப்படும். அவர்களோடு பல விடயங்கள் பற்றி பேசவிருக்கின்றோம். அவர்களது பிரதிநிதித்துவம் தொடர்பாகவும், எதிர்காலத்தில் முன்னெடுக்கப்படும் அரசியல் முன்னெடுப்புக்கள் தொடர்பாகவும் விரிவாக ஆராயவேண்டியிருப்பதால், மிகவிரைவில் அவர்களைச் சந்தித்து பேசவிருக்கின்றோம்.

(10 ஆம் பக்கம் பார்க்க)

## அரைக்கும் ஆலை பொயிலர் வெடித்து 6 மாதக் குழந்தை உட்பட இருவர் பலி!

### அம்பாறை - நிந்தவூர் பகுதியில் சம்பவம்

அம்பாறை - நிந்தவூரில் அரைக்கும் ஆலை ஒன்றில், வேலைசெய்து கொண்டிருந்த பொயிலர் ஒன்று உயர் வெப்பத்தினால் வெடித்துச் சிதறியதில் - அங்கு நின்ற ஆறு மாதக் குழந்தை உட்பட இருவர் அந்த இடத்திலேயே உயிரிழந்தனர். நான்கு தொழிலாளர்கள் கடும் எரிகாயங்களுக்கு உள்ளாகி கண்டி வைத்தியசாலையில் அனுமதிக்கப் பட்டுள்ளனர்.

இந்தச் சம்பவம் பற்றி மேலும் தெரியவருவதாவது -

நேற்று குறித்த அரைக்கும் ஆலையில் வேலைசெய்து கொண்டிருந்த வேளை, அங்கிருந்த பொயிலர் உயர் வெப்பம் அதிகரித்தமையினால்

(10 ஆம் பக்கம் பார்க்க)

## காணாமற்போனோர் விசாரணை படையினர் ஒத்துழைக்கவில்லை!

### விசாரணைக்குழு அறிக்கை சமர்ப்பிப்பு

(கொழும்பு)

காணாமற்போனோரின் விசாரணைகளை மேற்கொள்வதற்கு, இராணுவ அதிகாரிகள் போதுமான ஒத்துழைப்பு வழங்கவில்லை என்று, அது தொடர்பான விசாரணையை மேற்கொள்ளும் குழுவினர் தெரிவித்தனர்.

அந்தக் குழுவின் வெளியிட்டுள்ள அறிக்கையில் -

37 சந்தேகநபர்களின் பட்டியலை இராணுவ அதிகாரிகளிடம் கொடுத்ததாகவும்- ஆனால், ஒரு நபரைக் கூட இராணுவ அதிகாரிகள் அடையாளம் காட்டவில்லையென்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்தக் குழு, வடக்கு - கிழக்கில் காணாமற்போன சுமார் 300 பேரின் விசாரணைகளை மேற்கொணடது.

இதில் பெரும்பாலானோர் இராணுவத்தால் கொல்லப்பட்டவர்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

சண்டை நடந்த பகுதிகளில் இன்னும் பலர் காணாமற்போனது பற்றி புலனாய்வு செய்யவேண்டியது அவசியமென அந்த அறிக்கையில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளது.

## பேச்சுக்களில் முஸ்லிம்கள் தனித்தரப்பு; அரசு இணக்கம் என்கிறார் அமரதுங்க!

(திருகோணமலை)

புலிகளுக்கும் அரசுக்கும் இடையில் அடுத்த கட்டமாக நடைபெறவுள்ள பேச்சுக்களின்போது, முஸ்லிம்கள் தனித்தரப்பாகப் பங்குபற்ற அங்கீகரிப்பதென அரசாங்கம் தீர்மானித்துள்ளதாக, உள்துறை அமைச்சர் ஜோன் அமரதுங்க தெரிவித்தார்.

சில தினங்களுக்கு முன்னர் கிண்ணியாவில் நடைபெற்ற சம்பவம் தொடர்பாக ஆராய்வதற்கென, உள்துறை அமைச்சர் ஜோன் அமரதுங்க திருமலை சென்றபோதே கிண்ணியா முஸ்லிம் பிரதிநிதிகளிடம் இவ்வாறு தெரிவித்தார்.

இந்தச் சந்திப்பு - திருகோணமலை போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழுவின் தலைவர் அப்துல் பூர்க்கான் தலைமையில் நடைபெற்றது. இந்தச் சந்திப்பில்- உள்துறை அமைச்சர் ஜோன் அமரதுங்க, உள்துறை அமைச்சின் செயலர் எம்.என்.ஜுனைட், திருமலை மாவட்ட பொலிஸ் அத்தியட்சகர் நெவில் விஜயசிங்க, இராணுவக் கட்டளைத் தளபதி மேஜர் ஜெனரல் சுனில் தென்னக்கோன்,

(10 ஆம் பக்கம் பார்க்க)

EXPOAIR
your friend in the skies...
இலங்கையில் முன்னணி வகிக்கும் உள்ளூர் விமான சேவை....
ஒதுக்கீடுகளுக்கு அழையுங்கள் 021 ~ 2223891 2226297
0712348888 0712349999 074512666 012360290 012360291
email . jaffna @ expoavi . com.
(சி -1620)
எக்ஸ்போஎயார்
வான் வெளியில் உங்கள் தோழன்...

## யாழ் குடாநாட்டில்

# வெளிநாட்டு நிறுவனங்களின் பணி அறிக்கை தயாரிப்பதில் மட்டுமே!

### தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு பிரதிநிதி ரவிராஜ் குற்றச்சாட்டு

யாழ்.குடாநாட்டில் சேவையாற்றும் வெளிநாட்டு நிறுவனங்கள் உரிய முறையில் தமது பணியை செய்யவில்லை. அவர்கள் வெறும் அறிக்கை தயாரிப்பதில் மட்டுமே ஈடுபட்டுள்ளார்கள் என, தமிழீழ பொருண்மிய மேம்பாட்டுநிறுவனப் பிரதிநிதி ரவிராஜ் தெரிவித்தார்.

யாழ்.குடாநாட்டின் அபிவிருத்தி தொடர்பாக யாழ்.செயலகத்தில் நேற்று நடைபெற்ற கலந்துரையாடலில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே, அவர் இதனைத் தெரிவித்தார். யாழ்.அரச அதிபரின் தலைமையில் நடைபெற்ற இக்கலந்துரையாடலில் அரச உயரதிகாரிகள் பலரும் கலந்துகொண்டனர்.

இங்கு ரவிராஜ் தொடர்ந்து உரையாற்றுகையில் வெளிநாட்டு நிறுவனங்கள் தமது சேவைகளை வழங்குவதற்கு தகுதியுள்ள பயனாளிகளை கண்டறிவதில்லை. செயற்திட்டம் ஒன்றுக்காக ஒதுக்கப்படும் நிதியை செலவழிப்பதிலேயே அவர்கள் மும்முரமாக உள்ளார்கள். ஆனால் எவ்வாறு அதனைச் செலவழிக்கவேண்டும் என்பதில் அக்கறை கொள்வதில்லை.

1995 ஆம் ஆண்டுக்கு முன் தமிழீழமெங்கும் அபிவிருத்தித் திட்டங்கள், உட்கட்டுமானங்கள் என்பவை தொடர்பாக சரியானதொரு திட்டமிருந்தது. அதனை மறைந்த பேராசிரியர் துரைராஜா அவர்கள் தயாரித்திருந்தார். அந்தத் திட்டத்தை அமுல்படுத்த முடியாத துர்ப்பாக்கிய நிலைமை ஏற்பட்டதெனவும் அவர் தெரிவித்தார்.

இந்த நிகழ்வில், பொருளாதாரம், குடிநீர், தொழில்நுட்பத்துறை போன்ற பல விடயங்கள் ஆராயப்பட்டன. இந்த நிகழ்வில் கருத்து வெளியிட்ட அரச அதிபர் நீர் வழங்கல், வடிகாலமைப்பு தொடர்பாக, யாழ்ப்பாணத்தில் இதுவரை சரியான திட்டங்கள் அறிமுகப்படுத்தப்படவில்லை என சுட்டிக்காட்டினார்.

இதனை நிவர்த்தி செய்வதற்காக 2005 ஆம் ஆண்டிலிருந்து 'நியாப்' திட்டம் மூலம் குடிநீர் வழங்கலை மேற்கொள்ள உத்தேசித்துள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

காலை தொடக்கம் மாலைவரை நடைபெற்ற இச்செயலமர்வில் கலந்துகொண்ட அதிகாரிகள் நான்கு குழுவாக பிரித்து கருத்துப் பகிர்வுகள் மேற்கொள்ளப்பட்டன. பின்னர் இவர்கள் ஒவ்வொருவரும் தமது ஆலோசனைகளையும் தீர்மானங்களையும் தெரிவித்தனர்.

இக் கலந்துரையாடலில் முன்வைக்கப்பட்ட கோரிக்கைகள் பரிசீலிக்கப்பட்டு, சாதகமான நடவடிக்கைகள் எடுக்கப்படும் எனவும் செயலக வட்டாரங்கள் தெரிவித்தன. (ச)




மானிப்பாய் பரிஷ் லியோ கழகத்தினால் தெங்கு பயிற்செய்கை ஊக்குவிப்பு செயற்திட்டத்தின் கீழ் புத்தளத்திலிருந்து தருவிக்கப்பட்ட தென்னங்கன்றுகள் பிராந்திய எல்லைக்குட்பட்ட வறுமைக்கோட்டின் கீழ் வாழ்கின்ற குடும்பங்களுக்கு வழங்கப்படுவதை படத்தில் காணலாம். (91)

## உள்நாட்டு வர்த்தகத் திணைக்களம்

# ஏல விற்பனை செய்யப்படுவதை ஏதிர்த்து உயர்நீதிமன்றில் வழக்கு

(கொழும்பு)

உள்நாட்டு வர்த்தகத் திணைக்களத்தை ஏல விற்பனை செய்யப்படுவதை ஆட்சேபித்து, அந்தத் திணைக்களத்தில் பணியாற்றும் 115 ஊழியர்களும் கூட்டாகச் சேர்ந்து அடிப்படை மனித உரிமை மீறல் வழக்கொன்றை உயர் நீதிமன்றில் தாக்கல்செய்துள்ளனர்.

இந்தத் திணைக்களத்தை ஏலவிற்பனை செய்வதன்மூலம், தமது தொழிலுக்கு பாதுகாப்பற்றநிலை உருவாகுமென, மனுதாரர்களின் மனுவில் குறிப்பிடப்பட்டுள்ளது.

உள்நாட்டு வர்த்தகத் திணைக்களம் தொடர்ந்து நட்டத்தில் இயங்கிவருவதாலேயே அதனை ஏல விற்பனை செய்ய முடிவெடுக்கப்பட்டிருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது. (01)

# தரம் ஐந்து மாணவர்களுக்கான இலவச புலமைப்பரிசில் கருத்தரங்கு

(யாழ்ப்பாணம்)

யாழ். கல்வித் திணைக்களத்தின் அனுசரணையுடன் 5 ஆம் ஆண்டுப் புலமைப்பரிசில் மாணவர்களுக்கான இலவச புலமைப்பரிசில் கருத்தரங்கு மேல்மாகாண ஆசிரிய ஆலோசகர் த.அம்பிகைபாகனால் நடாத்தப்படவுள்ளது.

இந்தக் கருத்தரங்கு காலை 9 மணி தொடக்கம் மாலை 4 மணி வரை நடைபெறும். இதில் இணைந்து கொள்ளவிரும்பும் பாடசாலைகள், கருத்தரங்குகள் நடைபெறும் பாடசாலை அதிபர்களுடனும், கோப்பாய் கோட்டக் கல்விப் பணிப்பாளர் எஸ்.சிவஞானசுந்தரத்துடனும், தொடர்பு கொள்ளுமாறு கேட்கப்படுகின்றனர்.

இந்தக் கருத்தரங்கு இன்று யாழ். இந்து ஆரம்பப் பாடசாலையிலும், நாளை கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரியிலும் முதலாம் திகதி புத்தூர் சோமஸ்கந்தாக் கல்லூரியிலும் இரண்டாம் திகதி புனித ஜோன் பொஸ்கோவிலும் நடைபெறும்.

கருத்தரங்கில் கலந்துகொள்ள வரும் மாணவர்கள் மதிய போசனத்துடன் வருகை தருமாறு ஏற்பாட்டாளர்கள் தெரிவித்துள்ளனர்.

# யாழ். குடாநாட்டில் கைத்தொழில்கள்; உலக வங்கியின் உதவியுடன் அபிவிருத்தி

### நான்கு கிராமங்கள் தெரிவு

உலக வங்கியின் நிதி உதவியுடன் யாழ்.குடாநாட்டில் விவசாயம் அல்லாத கைத்தொழில்கள் அபிவிருத்தி செய்யப்படவுள்ளன. இத்திட்டத்தின் முதற்கட்டமாக நான்கு கிராமங்கள் தெரிவுசெய்யப்பட்டு ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

சாவகச்சேரி பிரதேச செயலகப் பிரிவில் நாவற்குழி மேற்கும், கோப்பாய் பிரதேச செயலர் பிரிவில் புன்னாலைக்கட்டுவன் வடக்கும், கல்வியங்காடும், சண்டிலிப்பாய் பிரதேச செயலர் பிரிவில் சுழிபுரமும் ஆகிய நான்கு கிராமங்களும் தெரிவுசெய்யபட்டுள்ளன.

தனியார் நிறுவனம் ஒன்றைச் சேர்ந்த ஆய்வுப் பணியாளர்கள் மேற்குறித்த இந்தக் கிராமங்களிலே தமது பணியை நேற்றுமுதல் மேற்கொண்டுவருகின்றனர். இவர்கள் இக் கிராமங்களில் விவசாயம் அல்லாத கைத்தொழிலில் ஈடுபட்டவர்களை கண்டறிந்து அவர்களின் தகுதியானவர்களின் பெயர்களை உலக வங்கிக்கு சிபாரிசுசெய்யவுள்ளனர்.

தெரிவுசெய்யப்பட்ட கைத்தொழில்களுக்கு வேண்டிய கடனுதவி, தொழில்நுட்ப உதவி என்பவற்றை உலகவங்கி வழங்கவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. தெரிவுசெய்யப்படும் கைத்தொழில்களுக்கு வேண்டிய பயிற்சிகளும் வழங்கப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கதாகும்.

# சக்தியின் வடிவங்கள் நூல் வெளியீட்டு விழா!

வே.அம்பிகைபாகன் எழுதிய 'சக்தியின் வடிவங்கள்' என்னும் நூல் வெளியீட்டு விழா நல்லூர் துர்க்கா தேவி மண்டபத்தில் யாழ்.பல்கலைக்கழக இந்துநாகரிகத்துறைத் தலைவர் திருமதி நாச்சியார் செல்வவிநாயகம் தலைமையில் எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை நடைபெறவுள்ளது.

ஆசியுரையை கலாநிதி தங்கம்மா அப்பாக்குட்டி வழங்குவார். யாழ்.பல்கலைக்கழக பேராசிரியர் பி.கோபாலகிருஷ்ண ஐயர் அறிமுகவுரையையும், யாழ். பல்கலைக்கழக வரலாற்றுத்துறை விரிவுரையாளர் கலாநிதி பி.புஷ்பரட்ணம் வெளியீட்டுரையையும், நுண்கலைத்துறை தலைவர் கலாநிதி ஏ.கிருஷ்ணவேணி மதிப்பீட்டுரையையும் வழங்குவர். இலக்கிய கலாநிதி கே.சொக்கலிங்கம் பாராட்டுரையை நிகழ்த்துவார். திருமதி சிவதர்சினி அம்பிகைபாகன் நன்றியுரையை நிகழ்த்துவார். (17)

# புத்தாக்குனர் கண்காட்சியில் பரிசு பெற்ற மாணவர் விபரம்

வடக்கு - கிழக்கு மாகாண பாடசாலை மாணவர்களுக்கிடையே நடாத்தப்பட்ட புத்தாக்குனர் கண்காட்சி 2003 இல் முதலாம், இரண்டாம், மூன்றாம் இடங்களைப் பெற்ற மாணவர்களின் விபரங்கள் கீழே தரப்பட்டுள்ளன.

மேற்படி கண்காட்சிப்போட்டியில் முதலாம் இடத்தைப் பெற்ற மாணவர்களுக்கு 5000 ரூபா பணமும், தங்கப் பதக்கமும், இரண்டாம் இடத்தைப் பெற்ற மாணவர்களுக்கு 3000 ரூபா பணமும், மூன்றாம் இடத்தைப் பெற்ற மாணவர்களுக்கு 2000 ரூபா பணமும் வழங்கப்பட்டது.

இந்தக் கண்காட்சியில் கலந்துகொண்ட மாணவர்கள் அனைவருக்கும் சான்றிதழ்கள் வழங்கப்பட்டுள்ளன.

மேற்படி கண்காட்சி நிகழ்வும், பரிசளிப்பு விழாவும், யாழ்.மத்திய கல்லூரியில் நேற்று நடைபெற்றது. இந்த நிகழ்வில் வலயக் கல்விப் பணிப்பாளர் ப.விக்னேஸ்வரன் தலைமை வகித்தார். புத்தாக்குனர் கழகத்தின் இணைப்பாளர் கே.சரத் பெரேரா பிரதமவிருந்தினராகக் கலந்துகொண்டார்.

**கனிஷ்ட போட்டியாளர்கள்**

ஏ.ஜெனால்ட் (புனித பத்திரிசியார் கல்லூரி), கே.எம்.கிருஷ்ணா (யாழ்.மத்திய கல்லூரி), டபிள்யூ.ரி. தியோபலிஸ் (புனித பத்திரிசியார் கல்லூரி).

**உயர்விருது**

எஸ்.ஏ.ஜெயராஜ் (புனித பத்திரிசியார் கல்லூரி), ரி.முகுந்தன் (யாழ். மத்தியகல்லூரி), ஏ.ஏ.விமல்ராஜ் (சில்லாலை ஆர்.சி.ஜே.எம்.வித்தியாலயம்). வை.தயாபரன் (கைதடி நாவற்குழி ம.வி), சுதன் (அ.த.க.பாடசாலை), ஏ.கணந்துரன், ரி.குகன், கே.சுகிதரன், எஸ்.சுகந்தன், ரி.டெசோக்குமார்.

**சிரேஷ்ட போட்டியாளர்கள்**

கே.துஷிதன், ஜி.கபூரன், ஜி.கஜீவன், என்.நிதர்சன் (வைத்தியலிங்கம் மத்திய மகாவித்தியாலயம்), என்.பிரசாந்த் (யாழ்.மத்திய கல்லூரி), ஜி.மதீஸ் , ஆர்.சுரேஸ் (சாவகச்சேரி இந்துக் கல்லூரி).

**உயர்விருது**

ஜே.சுபாஸ்கர், எஸ்.விநோதன் (சாவகச்சேரி இந்துக் கல்லூரி), ஏ.ஜெயசீலன் (உடுவில் மான்ஸ் மத்திய மகாவித்தியாலயம்), ஏ.பாலகிருஷ்ணா (விக்ரோறியாக் கல்லூரி), எஸ்.பரதகுமாரன் (யாழ்.மத்தியகல்லூரி).

### முகிழ்ந்து மகிழ்வோம் கலைக்கூடல்

முகிழ்ந்து மகிழ்வோம் நம் சோதர உறவுகளுடன் எனும், தொனிப்பொருளில் கிரு குழுவினர் நடத்தும் சிங்கள தமிழ் கலைக்கூடல் இன்றும், நாளையும் கொழும்பு புதிய நகரசபை மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

தினமும் காலை மாலை என இரு அமர்வுகள் இடம்பெறும். காலை 9 மணி முதல் இரவு 8 மணிவரை நிகழ்வுகள் இடம்பெறும். தமிழ், சிங்கள அறிஞர்கள், கலைஞர்கள் பங்குபற்றும் இந்த நிகழ்வில் வடக்கு கிழக்கில் இருந்தும் பேராளர்கள் பங்குபற்றவுள்ளனர். (111)

# மனநோயாளியின் உறவினர்கள்; தொடர்புகொள்ளக் கோரிக்கை

வல்வெட்டித்துறை பொலிஸாரினால் வல்வெட்டித்துறை மாவட்ட வைத்தியசாலையில் ஒப்படைக்கப்பட்ட சித்தசுவாதீனமற்ற பெண்ணின் உறவினர்களை வைத்தியசாலையுடன் தொடர்புகொள்ளுமாறு மாவட்ட வைத்திய அதிகாரி - வைத்திய கலாநிதி கே.மயிலேறும் பெருமாள் தெரிவித்துள்ளார்.

கறுப்பு நிறமான இப்பெண் வெள்ளைச் சட்டையும், கலர் பூச் சேலையும் அணிந்துள்ளார். காதில் தங்கத்தோடு, கழுத்தில் தங்கச்சங்கிலி ஆகியவையும் அணிந்துள்ளார். இவருக்கு சுமார் 48 வயது இருக்குமெனவும், தெரிவிக்கப்பட்டுள்ளது. இவர் தொண்டமனாறு ஊரிக்காட்டிலுள்ள வீடொன்றுக்குள் புகுந்த போது, அவ்வீட்டு உரிமையாளர்களால் வல்வெட்டித்துறை பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டு வைத்தியசாலையில் ஒப்படைக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (17)

தேவை

நன்கு அப்பளம் செய்யத்தெரிந்த ஆண்களும், பெண்களும் தேவை. நேரில் வரவும்.

மில்க்வைற் சோப் இண்டஸ்ரியல்,
மில்க்வைற் இல்லம்,
527, கே.கே.எஸ் வீதி,
யாழ்ப்பாணம்.

ராஜா யாழ்ப்பாணம்.

பிதாமகன்

காட்சிநேரம் 10.30, 2.30, 6.30 (பு.நே)
ஆசனங்களை முற்பதிவு செய்துகொள்ளலாம்.
(சி-1619)

நிறஞ்சனாஸ் சங்கானை

இன்றுமுதல்
எம்.ஜி.ஆர் (இருவேடம்), சறோஜாதேவி நடித்த
எங்க வீட்டுப்பிள்ளை
காட்சி நேரம்: 11.00, 2.45, 6.00 (பு.நே.)
வெள்ளி, சனி, ஞாயிறு இரவு 8.45 (பு.நே.)
XXX
(சி-1618)

NATURAL HEALTH LINE

சித்த மருத்துவர்களின் சேவைகள்

- இயற்கை மூலிகை சிகிச்சை முறைகள்
- ஆயுர்வேத சித்த மருத்துவ சிகிச்சை
- பஞ்சகர்ம சிகிச்சை முறைகள்
- மற்றும் மருத்துவ ஆலோசனைகள் என்பன

நோயாளர் தங்குமிட வசதியுடன்

31.10.2003 வெள்ளிக்கிழமை முதல் ஆரம்பிக்கப் படுகின்றது.

சிகிச்சை நேரம் - தினசரி காலை 8 மணிமுதல் இரவு 9 மணிவரை - நிர்வாகி

Natural Health Line
(நாயன்மார்கட்டு முறிவு, நெரிவு வைத்தியசாலை)
262, செம்மணி வீதி,
நாயன்மார்கட்டு, நல்லூர், யாழ்ப்பாணம். (517)

# யாழ்.சிறையில் தடுத்துவைத்துள்ள இரு இந்திய மீனவர்களும் விடுவிப்பு!

பருத்தித்துறை இன்பருட்டி கடற்பரப்பில் வைத்து உள்ளூர் மீனவர்களால் பிடிக்கப்பட்டு யாழ்.சிறைச்சாலையில் தடுத்துவைக்கப்பட்டிருந்த இந்திய மீனவர்கள் இருவரையும் பருத்தித்துறை நீதிமன்று நேற்று முன்தினம் விடுவித்தது.

காங்கேசன்துறை கடற்படைத் தளத்தில் தடுத்துவைக்கப்பட்டிருக்கும் அவர்களின் மீன்பிடிப் படகுகள் இரண்டையும் உபகரணங்களுடன் விடுவிக்கவும் பருத்தித்துறை நீதிவான் க.அரியநாயகம் பொலிஸாருக்கு உத்தரவிட்டார்.

சட்டமா அதிபரின் பணிப்புரைகளையடுத்தே து.மகேந்திரன், தி. பாலமுருகன் ஆகிய இரு இந்திய மீனவர்களையும் பருத்தித்துறை நீதிமன்று நேற்றுமுன்தினம் விடுவித்தது.

கடந்த செம்ரெம்பர் மாத முற்பகுதியில் வடமராட்சி கடற்பரப்பினுள் அத்துமீறிப் பிரவேசித்து மீன்பிடித் தொழிலில் ஈடுபட்டிருந்த வேளை, இவர்களுடன் சேர்த்து பத்து இந்திய மீனவர்கள் உள்ளூர் மீனவர்களால் பிடிக்கப்பட்டிருந்தனர்.

எனினும் படகோட்டிகளான இவர்கள் இருவரைத் தவிர ஏனைய எண்மரும் முன்னரே விடுவிக்கப்பட்டிருந்தனர்.

இதேவேளை, அண்மைக்காலமாக குடாநாட்டு கடற்பகுதிக்குள் அத்துமீறி பிரவேசித்து மீன்பிடித் தொழிலில் ஈடுபட்டவேளை கடற்படையினராலும், உள்ளூர் மீனவர்களாலும் பிடிக்கப்பட்டிருந்த 31 இந்திய மீன்பிடி இழுவைப்படகுகள் கடற்படை முகாம்களில் தொடர்ந்தும் தடுத்துவைக்கப்பட்டுள்ளன.

மறுபுறத்தே இவ்வாறு அத்துமீறி உட்பிரவேசித்த நான்கு இந்திய மீனவர்களது இழுவைப் படகுகள் யாழ்.மேல்நீதிமன்றால் அண்மையில் பறிமுதல் செய்யப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

### புகலிடம் கோரி விண்ணப்பித்த

# ஒரு தொகுதி இலங்கையருக்கு அனுமதி வழங்க பிரிட்டன் முடிவு!

(லண்டன்)

**பிரிட்டனில் அகதி அந்தஸ்து கோரி விண்ணப்பித்த ஒரு தொகுதி வெளிநாட்டவர்களுக்கு, நிரந்தர வதிவிட அனுமதி வழங்குவது குறித்து, அந்த நாட்டுஅரசாங்கம் தீர்மானித்திருப்பதாகத் தெரியவருகிறது.**

இந்தத் தீர்மானத்துக்கமைய சுமார் இரண்டாயிரம் பேரின் விண்ணப்பங்களுக்கு சாதகமான பதில்களை அளிக்க முடிவுசெய்யப்பட்டிருப்பதாக கூறப்படுகிறது.

இதேவேளை, லண்டனில் அகதி அந்தஸ்து கோரி விண்ணபித்து நிராகரிக்கப்பட்டு, நீதிமன்றில் வழக்கு தாக்கல் செய்திருந்த இலங்கையர்கள் சிலருக்கு கடந்த மாதம் அகதி அந்தஸ்து வழங்கப்பட்டிக்கிறது.

திடீரென இவ்வாறு அகதி அந்தஸ்து வழங்கப்பட்டிருப்பது பலருக்கும் ஆச்சரியத்தை ஏற்படுத்தியிருப்பதாக, அங்கிருந்து கிடைக்கும் செய்திகள் தெரிவிக்கின்றன.

இதேவேளை, புகலிடக் கோரிக்கை நிராகரிக்கப்பட்ட இலங்கையர்களைப் பிடித்து நாடு கடத்தும் நடவடிக்கைகளிலும், பிரிட்டனின் குடிவரவு, குடியகல்வு அதிகாரிகள் தீவிரம் காட்டி வருகின்றனர்.

கடந்த இரண்டு வாரங்களில் மட்டும் 15 இற்கும் மேற்பட்ட புகலிடக் கோரிக்கை நிராகரிக்கப்பட்டவர்கள், பலவந்தமாக இலங்கைக்கு நாடுகடத்தப்பட்டதாகத் தெரியவருகிறது.

அத்துடன், பிரிட்டனில் கிரிமினல் குற்றங்களுடன் தொடர்புடையவர்கள் எனச் சந்தேகிக்கப்பட்டவர்களை தேடிக் கண்டுபிடிக்கும் நடவடிக்கைகள் தீவிரமடைந்து வருகின்றன. இவ்வாறு கிரிமினல் குற்றங்களுடன் தொடர்புடைய 150 பேர்வரையில், பிரிட்டன் பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டிருப்பதாக, அங்கிருந்து கிடைக்கும் செய்திகள் தெரிவிக்கின்றன.

# உண்மையான சமாதானம் ஏற்படவேண்டுமானால் இடம்பெயர்ந்த மக்கள் மீளக் குடியமர வேண்டும்!



## நாடாளுமன்ற விவகார அலுவல்கள் அமைச்சர் அஸ்வர்

உண்மையான சமாதானம் ஏற்படவேண்டுமாக இருந்தால், உடைந்து போன கட்டடங்கள் உருப்பெறவேண்டும். சொந்த இருப்பிடங்களில் மக்கள் மீளக்குடியமர்த்தப்படவேண்டும். இல்லையேல் சமாதானம் என்பது கனவாகவே போகுமென, நாடாளுமன்ற விவகார அலுவல்கள் அமைச்சர் ஏ.எச்.எம்.அஸ்வர் தெரிவித்தார்.

யாழ். மாவட்ட, வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்களின் பிரத்தியேக செயலாளர்கள், எழுதுவினைஞர்கள், உதவியாளர்களுக்கான பயிற்சி நெறியொன்று நேற்றுமுன்தினம் யாழ். செயலகத்தில் நடைபெற்றது. அரச அதிபர் செ.பத்மநாதன் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் பிரதம அதிதியாக கலநது கொண்டு உரையாற்றும்போதே, அமைச்சர் இவ்வாறு தெரிவித்தார். அவர் அங்கு மேலும் தெரிவித்ததாவது,

நான் பலாலியில் விமானம் மூலம் வந்திறங்குவதற்கு முன், விமானத்தில் இருந்தபடி, உடைந்த கட்டடங்களையும், பற்றை மண்டியுள்ள காணிகளையுமே கண்டேன். வன்முறையின் அடையாளங்களாக அவை இன்றும் இருப்பது கவலைக் குரிய விடயமாகும்.

யுத்தத்தின் மூலம் சமாதானத்தை எட்டமுடியாது, யுத்தத்தின் இறுதியில் தோல்விதான் ஏற்படும். இதனை உணர்ந்துதான் இந்த நாட்டில் யுத்தம் புரிந்த பலர் ஆயுதங்களை கீழே வைத்தனர். அதற்கு ஒரு காரணம்- அரசு மீதான நம்பிக்கை. தமிழ், சிங்கள, முஸ்லிம் இனங்களுக்கிடையிலான நம்பிக்கை மூலம் கட்டியெழுப்பப்பட்டதே இந்த அரசாங்கம்.

சமாதானத்தை ஏற்படுத்துவதில் ஏனைய இனங்களை விட, தமிழ் மக்களுக்குத்தான் பெரியதொரு கடமை இருக்கின்றது. காரணம், போரினால் அதிகம் பாதிக்கப்படவர்கள் தமிழ்மக்கள்.

சமாதானத்தைக் குழப்புவதற்கு, தென்னிலங்கையில் இன்று பல சக்திகள் முயன்று கொண்டிருக்கின்றன. அரசு சமாதானத்தைக் கொணடு வருவதற்காக பாடுபட்டுக்கொண்டிருக்கிறது. வெளிநாட்டு முதலீட்டாளர்கள் எமது நாட்டுக்கு வருகிறார்கள். ஆனால், சிலர் சமாதானத்தைக் குழப்புவதற்கு என்னென்ன செய்ய வேண்டுமோ அத்தனை முயற்சிகளையும் செய்துகொண்டிருக்கிறார்கள்.

இது எமது நாடு. தமிழர்களுக்கும் சொந்தமான நாடு. தனியே சிங்களவர்களுக்கு மட்டும் உரியதல்ல. தமிழ்மக்களுக்கும் உரிமைகள் இருக்கின்றன. அந்த உரிமைகளைத்தான் அவர்கள் கேட்கிறார்கள். அதனைக் கொடுக்கவேண்டிய கடமை அவர்களுக்கு உண்டெனவும் அவர் மேலும் தெரிவித்தார்.




கொழும்பில் நடைபெற்ற சிங்கள - தமிழ் கலைக்கூடல் தொடர்பான செய்தியாளர் சந்திப்பில் கலந்துகொண்ட தர்மசிறி - பண்டாரநாயக்கா, பேராசிரியர் ஹம்லத் பேராசிரியர் சிவத்தம்பி நிகழ்ச்சி அமைப்பாளர் அஜித் பரகு ஆகியோரைப் படத்தில் காணலாம்.

## மாலைதீவு கருவாட்டுக்கு தடை

(கொழும்பு)

கடந்த பல வருடங்களாக, மாலைதீவிலிருந்து பெருமளவில் இறக்குமதி செய்யப்பட்டுவரும் கருவாட்டில், இரண்டாம் தரத்திலுள்ள இறக்குமதியை உடனடியாக நிறுத்த அரசு முடிவெடுத்துள்ளது.

இரண்டாம் தரத்திலுள்ள கருவாட்டு இறக்குமதியை நிறுத்துவதன் மூலம், விரைவில் கருவாட்டு இறக்குமதியை முற்றாக நிறுத்தி, இலங்கையின் கருவாட்டு உற்பத்தியை உயர்த்துவதென்றும் அரசு முடிவெடுத்துள்ளது.

## அமைதிப் பிரார்த்தனை

(யாழ்ப்பாணம்)

தமிழர் விடுதலைக் கூட்டணியின் கருத்தரங்கும், அவர்களுக்கிடையேயான ஒற்றுமையை வலியுறுத்தியும் தந்தைசெல்வா சதுக்கத்தில் அடுத்த மாதம் 2 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணிக்கு அமைதிப் பிரார்த்தனை ஒன்று நடைபெறவுள்ளது.

# பொலிஸ் ஆணைக்குழுவை வற்புறுத்துவோர் 1 லட்சம் ரூபா அபராதம் செலுத்த வேண்டும்

## அரசியலமைப்பு சபை தெரிவிப்பு

சுயாதீன பொலிஸ் ஆணைக் குழுவை பலவந்தப்படுத்த முடியாதென்றும், அவ்வாறு பலவந்தப்படுத்தினால் ஒரு லட்சம் ரூபா அபராதம் செலுத்தவேண்டும் என்றும் அரசியல் அமைப்பு சபை தெரிவித்துள்ளது.

சுயாதீனமாக இயங்கும் ஒரு அமைப்பை பலவந்தப்படுத்துவது நீதிமன்றத்துக்கு கொண்டுசெல்லப்படவேண்டிய ஒரு விடயமாகும்.

அண்மைக்காலமாக சுயாதீன பொலிஸ் ஆணைக்குழு, சில பலாத்கார பிரயோகங்கள் மேற்கொள்ளப்பட்டமை தொடர்பாக தகவல் தெரிவிக்கையிலேயே அரசியல் அமைப்புச்சபை இவ்வாறு தெரிவித்துள்ளது.

# சுற்றாடல் அதிகார சபையில் பணியாற்ற 50 தமிழ்மொழிமூல உத்தியோகத்தர்கள்

சுற்றாடல் அதிகார சபையின்கீழ் பணியாற்றவென வடக்கு - கிழக்கிலிருந்து சுமார் 50 தமிழ்மொழி மூல உத்தியோகத்தர்கள் நியமிக்கப்படவுள்ளனர்.

வடக்கு - கிழக்கில் போர் காரணமாக இதுவரை சுற்றாடல் அதிகார சபையின் பணிகள் செயல் இழந்திருந்தன. இதனால், கைத்தொழில் துறையூடாக சுற்றாடல் மாசுறுவதைத் தடுக்க எவ்வித முயற்சிகளும் முன்னெடுக்கப்படவில்லை.

இந்த நிலை தற்போதைய சமாதான சூழ்நிலையில் வடக்கு - கிழக்கில் சுற்றாடல் அதிகார சபையை இயங்கவைக்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுவருகின்றமை குறிப்பிடத்தக்கது. (01)

### தேசிய பாதுகாப்பு தொடர்பாக

# ஜனாதிபதிக்கா, பாதுகாப்பு அமைச்சருக்கா மிகக் கூடுதலான அதிகாரங்கள் உள்ளது!

## உயர் நீதிமன்றம் வெள்ளியன்று ஆராயும்

நாட்டின் தேசிய பாதுகாப்புத் தொடர்பாக ஜனாதிபதிக்கா அல்லது பாதுகாப்பு அமைச்சருக்கா கூடிய அதிகாரம் உள்ளதென்று, ஐந்து நீதியரசர்களைக் கொண்ட உயர்நீதிமன்றம் எதிர்வரும் வெள்ளிக்கிழமை ஆராயவுள்ளது.

இந்த ஐந்துபேர் கொண்ட நீதியரசர்கள் குழுவை பிரதம நீதியரசர் சரத் என்.சில்வா நியமித்துள்ளார்.

அரசியல் சாசனத்துக்கேற்ப நாட்டின் தேசிய பாதுகாப்புத் தொடர்பான கூடுதலாக அதிகாரம் யாருக்கு உள்ளது என்பது குறித்து ஜனாதிபதி விளக்கம் கோரி இருந்தமைக்கே இந்த நீதியரசர் குழு நியமிக்கப்பட்டது.

அரசியல் சாசனத்தின் மூலம் ஜனாதிபதிக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரங்கள் பாதுகாப்பு அமைச்சரால் அங்கீகரிக்கப்பட்டுள்ளதா என்பது பற்றி ஜனாதிபதி விளக்கம் கோரியிருக்கிறார்.

## இரு தரப்பு உறவுகள் குறித்து ரிரோன் பேச்சு

வியட்னாமுக்கு விஜயம் செய்துள்ள வெளிவிவகார அமைச்சர் ரிரோன் பெர்னாண்டோ ஹனோயில் அந்நாட்டு அரச பிரதிநிதிகளுடன் இருதரப்பு உறவுகளை வலுப்படுத்துவது குறித்து, நேற்றுமுன்தினம் பேச்சுக்களை நடத்தினர்.

சர்வதேச பயங்கரவாதம் குறித்து இடம்பெற்ற மாநாட்டில் பங்குபற்றிவிட்டு வியட்னாம் சென்றுள்ள ரிரோன் பெர்னாண்டோ அங்கு இலங்கை - வியட்னாம் கூட்டு ஆணைக்குழுவின் கூட்டத்தில் பங்கேற்றார்.

இந்தக் கூட்டுக்குழுக் கூட்டம் இரு வருடங்களுக்கு ஒருமுறை இடம்பெற்று- பொருளாதார அபிவிருத்தி, கலாசார, விஞ்ஞான தொழில்நுட்ப ஒத்துழைப்புக்குள் குறித்து இக்கூட்டத்தில் ஆராயப்பட்டுள்ளது குறிப்பிடத்தக்கது.

# சிங்கள - தமிழ் கலாசார விழா பெருமெடுப்பில் நடத்த ஏற்பாடு!

(கொழும்பு)

நீண்டகாலப் போரினால் சிங்கள- தமிழ் மக்களிடையே எழுந்துள்ள கடுமையான கசப்புணர்வைச் சீர்செய்யும் வகையில், சிங்கள - தமிழ் பிரபல கலைஞர்கள், பிரமுகர்கள் இணைந்து, ஓர் இருமொழிக் கலாசாரவிழா இன்றும், நாளையும் கொழும்பில் நடைபெறவுள்ளது.

காலை 9 மணியிலிருந்து இரவு 8 மணிவரை இருநாட்கள் நடைபெறவுள்ள இவ்விழா, கொழும்பிலுள்ள புது நகரசபை மண்டபத்தில் கோலாகலமர்க நடைபெற முன்னெடுப்புக்கள் நடைபெறுவதுடன், பல நூறு பிரபல இருஇனக்கலைஞர்களும் இதிலே பங்கேற்க இணக்கம் தெரிவித்துள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

நிரந்தர சமாதானம் என்ற தலைப்பில் நடைபெறவுள்ள இக் கலாசார விழாவிற்கு, வடக்கிலிருந்து 150 கலைஞர்களும், கிழக்கு, தெற்கு, மலையகப் பகுதிகளிலுமிருந்து நூற்றுக்குமதிகமான கலைஞர்களும், 150 இற்குமதிகமான சிங்களக் கல்லஞர்களும் பங்கேற்கவுள்ளதாகத் தெரியவருகிறது.


# மாணவிகளை வல்லுறவுக்குட்படுத்திய பாடசாலை ஆசிரியருக்கு விளக்கமறியல்

இரத்தினபுரிப் பிரதேச பாடசாலை ஒன்றின் ஆசிரியர் ஒருவர் தமது பாடசாலையில் கல்வி பயிலும் மாணவியருடன் பாலியல் வல்லுறவில் ஈடுபட்டுவந்தார் எனக் குற்றஞ் சாட்டப்பட்டுள்ளது.

குறித்த ஆசிரியர் தமது பாடசாலையைச் சேர்ந்த இரண்டு மாணவிகளுடன் பல தடவைகள் பாலியல் வல்லுறவில் ஈடுபட்டார் என சம்பந்தப்பட்ட மாணவிகள் செய்த முறைப்பாட்டை அடுத்தே, நேற்று இவரை பொலிஸார் கைதுசெய்து இரத்தினபுரி நீதிமன்றத்தில் ஆஜர் படுத்தப்பட்டார். இதனையடுத்து இவரை 14 நாட்கள் விளக்கமறியலில் வைக்குமாறு இரத்தினபுரி நீதிவான் உத்தரவிட்டார். (01)

# மகிழ்ச்சியாக வாழக்கூடிய சூழ்நிலை யாழ்ப்பாணத்தில் எவருக்கும் கிடையாது

## மகளிர் அரசியற்துறை பொறுப்பாளர் தமிழினி உரை



மகிழ்ச்சியாக வாழக்கூடிய மனப்பாங்கும், சூழ்நிலையும் யாழ்ப்பாணத்தில் எவருக்கும், எந்த இடத்திலும் தற்போது கிடையாது. நாங்கள் அனைவரும் அடிமைகளாகவே வாழ்ந்து கொண்டிருக்கின்றோம். எம்மைச்சுற்றி நாற்பதினாயிரத்திற்கும் மேற்பட்ட இரும்புத் துப்பாக்கிகள் குறிவைத்தபடி உள்ளன. இவ்வாறு தெரிவித்தார் தமிழீழ மகளிர் அரசியற்துறை பொறுப்பாளர் தமிழினி.

யாழ்.பல்கலைக்கழகத்தில் நடைபெற்ற தேசிய எழுச்சிப் பேரவையின் - இரண்டாவது பேராளர் சங்கமத்தில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே, அவர இவ்வாறு தெரிவித்தார். அங்கு அவர் மேலும் உரையாற்றுகையில் -

இன்று எம்மைச் சூழ்ந்துள்ள புறஉலகம் எப்படி உள்ளது என்பதை ஆழமாக உணர்ந்து கொண்டு தான் நாம் வாழ்ந்துகொண்டிருக்கின்றோமா? என்ற கேள்வியை கேட்டால் அது சோகமான விடயமாகவே அமையும் ஏனெனில், உண்மையான நிலையை எந்த மக்களும் உணரவில்லை.

எமது மக்கள் வெளிப்படையாக என்ன நினைக்கிறார்கள் எனின், நாங்கள் வசதியான வாழ்க்கையை வாழ்ந்து கொண்டிருக்கின்றோமென்று, வசதி வாய்ப்புக்களுக்குள்ளே அவர்கள் கட்டுண்டுள்ளார்கள்.

அன்று எமது தேவை போரிலே வெல்வதாக இருந்தது. எனவே போர்எழுச்சிக் குழுக்கள் உருவாக்கப்பட்டன. போர் ஓய்ந்துள்ள இன்றைய நிலையிலே எமக்கு முக்கியமாக தேவைப்படுவது, தேசிய எழுச்சியாகும். அதனாலேயே தேசிய எழுச்சிப் பேரவைகள் உருவாக்கப்பட்டுள்ளன.

எமது சமூகம் தலைமைத்துவம் என்பது பற்றி, தமக்குள்ளே ஒரு படிமத்தை வளர்த்துக் கொண்டுள்ளது. தலைமை என்பது ஒரு பதவியா? ஒரு கதிரையா? ஒரு கௌரவமா? ஒரு முடியா? ஒரு போதும் இல்லை. தலைமைத்துவம் என்பது ஒரு ஆளுமை.

ஒரு நெருக்கடியான சூழ்நிலையில், அதனில் இருந்து அடுத்த கட்டத்திற்கு தான் வழிநடத்திச் செல்லும் அணியை, மக்களை, தேசத்தை வழி நடத்திச்செல்வதுதான் உண்மையான தலைமைத்துவம். எனவே தலைமைத்துவத்தை நாம் ஒரு போதும் வசதி வாய்ப்புக்களோடு கற்பனை செய்து பார்க்கமுடியாது. நெருக்கடியான சிக்கலுக்குள் ஒரு உயிர்வதைபடும் போது, அதிலிருந்து அந்த உயிரை நிமிரவைப்பதுதான் உண்மையான தலைமை. அதைத்தான் நாங்கள் பெற்றுள்ளோம். உண்மையான தலைமைத்துவத்தை அறிந்து கொள்ள நாங்கள் புத்தகங்களையோ, வரலாறுகளையோ புரட்டவேண்டிய தேவையில்லை. எமது கண் முன்னாகவே வாழ்ந்து கொண்டிருக்கின்ற எமது தேசியத் தலைவரே எமது வழிகாட்டியாக அமைவார்.

ஒவ்வொருவருடைய மனங்களிலும் ஆழமான புரட்சி குடியிருக்கவேண்டும். நாங்கள்யார் என்பதுபற்றி முதலில் நாம் சிந்திக்க வேண்டும். நாங்கள் இன்று நிமிர்ந்து நிற்கின்றோம் என்றால் அதற்கு காரணம் என்ன? அந்த நிமிர்விற்காக, நாங்கள் கொடுத்த விலை - உயிர்களும், தசைகளும், இரத்தங்களும் என்பதுதான். எனவே நாம் யாருக்கும் அஞ்சி குனிந்துநிற்கத் தேவையில்லை.

எங்கள் ஒவ்வொருவருடைய மனங்களுக்குள்ளும் நேர்மை, சத்தியம், நியாயம் என்பன குடியிருக்க வேண்டும். ஒவ்வொரு மனிதனும் புரட்சியானவனாக இருக்க வேண்டும். எங்கள் கிராமங்கள் ஒவ்வொன்றுமே இந்தத் தேசத்திற்காகப் போராடவேண்டும். ஏதாவது செய்ய வேண்டும் என்ற எண்ணமுடைய பல இளைஞர்களும், யுவதிகளும் இருக்கிறார்கள். அவர்கள் அனைவரையும் ஒன்று சேர்க்க வேண்டியதேவை இன்று இருக்கிறது. அவர்களை சரியான முறையிலே வழிப்படுத்தி, கிராமங்கள் ஒவ்வொன்றையும் புரட்சியான மையங்களாக மாற்றவேண்டும். இது எப்படித் சாத்தியமாகும் என நீங்கள் எண்ணலாம். ஆனால், அதற்கு அப்பால் இந்த விடுதலைப் போராட்டம் எப்படிச் சாத்தியமாகியது என்று எண்ணிப்பாருங்கள்.

உண்மையான சுதந்திரம் என்பது, எமது சமூகத்திற்குள்ளே இருக்கும் சாதி, மத, சமூக ஏற்றத்தாழ்வுகளிலிருந்து, ஒவ்வொருவரும் விடுபடும்போதுதான் கிடைக்கும். இன்று எமது மக்களிடம் புரட்சியும், எழுச்சியும் இல்லையென்று சொல்லிவிட முடியாது. அவர்களுடைய அடிமனதிலே அது குடி கொண்டிருக்கிறது. அதனை மூடி - நான் பெரிது நீ பெரிது சாதி, மதம் எனும் அற்பத்தனமான பிரச்சனைகள் உள்ளன. ஒரு ஆழமான மனிதத்தேடல் இல்லாத, முற்போக்கு சிந்தனையற்றவர்களாக நாம் வாழ்ந்து கொண்டிருக்கின்றோம்.

போராட்டத்தின் நோக்கத்தை ஆழமாகப் புரிந்தால் இந்த அற்பத்தனங்கள் துரும்பாகத் தெரியும். ஆனால் சமூகத்தளத்திலே நின்றால், இந்த அற்பத்தனங்கள் தான் எம்மை ஆட்டிப்படைக்கும். எமது சமூகத்தில் உள்ள முற்போக்குத்தனங்களை களையவேண்டிய கடமையும், தேசிய எழுச்சிப் பேரவைகளுக்கே உண்டு எனவும் அவர்தெரிவித்தார்.

# சேவையில் ஈடுபட்டிருந்த படகினை கடற்படையினர் வழிமறித்து விசாரிப்பு

(யாழ்ப்பாணம்)

நெடுந்தீவில் இருந்து குறிகட்டுவான் நோக்கிப் பயணிகளுடன் புறப்பட்டுச்சென்ற 'உதயதாரகை' படகினை இடைக்கடலில் கடற்படையினரின் ரோந்துப்படகு ஒன்று நேற்று முன்தினம் வழிமறித்து விசாரித்தது.

நேற்றுமுன்தினம் மதியம் 1.30 மணிக்கு, நெடுந்தீவில் இருந்து சுமார் 35 பயணிகளுடன் குறிகட்டுவான் நோக்கிச் சென்று கொண்டிருந்த, நெடுந்தீவு .பல.நோ.கூ.சங்கப் படகான 'உதயதாரகை' யினை மதியம் 2.10 மணி அளவில் தொலைவில் இருந்து வந்த கடற்படைக் கலம் ஒன்றிலிருந்த கடற்படையினர் கைச்சைகை மூலம் தமது படகின் அருகில் வருமாறு அழைத்தனர். கடற்படைப் படகினைநோக்கி பயணிகள் படகு 15 நிமிட நேரம் கடற்பயணம் செய்து, கலத்தின் அருகில் சென்ற போது, ஆயுதங்கள் ஏதுமின்றி கலத்தில் நின்ற 10 இற்கு மேற்பட்ட கடற்படையினர் விரைந்து செயற்பட்டு, கலத்தின் உள்ளிருந்த ஆயுதங்களை எடுத்துவந்து மக்களை விரட்டும் வகையில் கலத்தில் நிலை எடுத்தன.

பெரும் அச்சத்துடன் படகோட்டிகளும், மக்களும் கடற்கலத்தின் அருகில் சென்றபோது அதனை தங்களது கடற்கலத்தில் இருந்தவாறே இருநிமிடநேரம் நோட்டமிட்டுவிட்டு, கலம் விரைந்து சென்றுவிட்டது. இந்த நிலையினால் பயணிகள் பெரும் பயப்பீதியுடன் தங்கள் பயணத்தைத் தொடர்ந்தனர்.

இதுபோன்ற ஒரு சம்பவம், கடந்தவாரம் குறிகட்டுவானில் இருந்து நெடுந்தீவை நோக்கிச் சென்ற பயணிகள் படகிற்கு ஏற்பட்டமை குறிப்பிடத்தக்கது.

சமாதான சூழ்நிலையில் கடற்படையினரின் இவ்வாறான சம்பவங்களினால் பயணிகள் பெரும் விசனமடைந்துள்ளனர்.

வழிமறித்த கடற்கலத்தில் எந்த விதமான அடையாள இலக்கங்களோ, கொடியோ காணப்படவில்லை என்பதும் குறிப்பிடத்தக்கது. (113)

## கோவாச்செய்கையில் விவசாயிகள் ஆர்வம்

(புன்னாலைக்கட்டுவன்)

புன்னாலைக்கட்டுவன் - ஈவினைப் பிரதேச விவசாயிகள் இந்த வருடம் கோவாச் செய்கையில், ஆர்வம் காட்டுவதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

கடந்த காலத்தில் கோவா பயிரிட்ட விவசாயிகள், கூடியளவு இலாபம் ஈட்டியதன் காரணமாக இந்த வருடம் கூடியளவு விவசாயிகள் கோவாச் செய்கையில் ஆர்வம் காட்டுவதாகக் கூறப்படுகின்றது.

(83)

## மாணவர்களின் கௌரவிப்பு விழாவுக்கு

# கல்லூரிக்குச் சென்ற பெற்றோர்களை படையினர் தடுத்து நிறுத்தினார்கள்

கடந்த ஏப்ரல் மாதம் நடைபெற்ற உயர்தரப் பரீட்சையில் சித்தியடைந்த பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரி மாணவர்களுக்கு, பாடசாலையில் நடந்த கௌரவிப்பு விழாவில் கலந்துகொள்ளச் சென்ற மாணவர்களின் பெற்றோர்கள் சிலரை, அங்கு செல்லவிடாமல் படையினர் தடுத்து நிறுத்தியுள்ளனர்.

நேற்று முன்தினம்காலை இந்தக் கல்லூரியின் பழையமாணவர் சங்கம் - கொழும்புக் கிளையினரின் ஏற்பாட்டில் இந்த நிகழ்வு இடம்பெற்றது. இந்த நிகழ்வில், கலந்து கொள்ளவந்த மாணவர்களின் பெற்றோர் சிலரே, இவ்வாறு படையினரால் தடுத்து நிறுத்தப்பட்டவர்களாவர். படையினரிடம் முன்னனுமதி பெறாமல் வந்தமையாலேயே, இவர்கள் தடுத்து நிறுத்தப்பட்டதாகப் படைத்தரப்பில் தெரிவிக்கப்பட்டது.

எனினும், பாடசாலை நிர்வாகத்தினர் படைத்தரப்பினருடன் பேசியதையடுத்து, நீண்ட தாமதத்தின் பின்னர் இந்தப் பெற்றோர்கள் பாடசாலைசெல்ல படையினர் அனுமதி வழங்கினர். (202)

## சீமெந்துக்கற்கள் திருட்டு

(புன்னாலைக்கட்டுவன்)

புன்னாலைக்கட்டுவன் - ஆயாக்கடவை சித்திவிநாயகர் தேவஸ்தான புனரமைப்புக்கென, அடுக்கி வைக்கப்பட்டிருந்த சீமெந்துக்கற்கள் இரவோடிரவாக களவாடப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

ஆலய புனரமைப்பிற்கென, 88 சீமெந்துக்கற்கள் வேறாக ஓர் இடத்தில் அடுக்கி வைக்கப்பட்டிருந்தது. அண்மையில் அடுக்கியிருந்த கற்களில், 46 கற்களை இரவோடிரவாகத் திருடிப்போயிருப்பதாக தெரிவிக்கப்படுகின்றது. (83)

## வாழ்க வளமுடன்

### இனிய பிறந்தநாள் வாழ்த்துக்கள்

#### முதலாவது அகவையில்



பெயர் : ம.ஜஸ்மிதா
முகவரி: நட்சத்திர பவனம், வதிரி.

#### முதலாவது அகவையில்



பெயர் : பா.பாதுஷன்
முகவரி: ஆனந்தமலர் , அல்வாய்

#### முதலாவது அகவையில்



பெயர் : நே.ஹனுசா
முகவரி: உச்சில் ஒழுங்கை, கரவெட்டி.

#### இரண்டாவது அகவையில்



பெயர் : த.தனுஜன்
முகவரி: இராஜவீதி, அச்சுவேலி.

#### ஆறாவது அகவையில்



பெயர் : சே. கீர்த்திகா
முகவரி: சங்கரத்தை

#### பத்தாவது அகவையில்



பெயர் : மு.ஜமீலா
முகவரி: இராணிபவனம், இளவாலை.

பல்லாண்டு காலம் வாழ்கவென வாழ்த்துகின்றோம்

# விஞ்ஞானமும் தொழில்நுட்பவியலும்

## கல்விப் பொதுத் தராதரப்பத்திர (சாதாரணதரப்) பரீட்சைக்கான முன்னோடி வினாத்தாள் - 2003

(சென்றவாரத் - தொடர்ச்சி....)


14. 1000w வலுவுள்ள ஐந்து அதிதூரவீச்சு மின்குமிழ்கள் நாளொன்றில் 10 மணித்தியாலம் ஒளிரவிடப்படுமாயின், மின்மானியின் வாசிப்பு கிலோவாற்றுமணியில்
1. 10 2. 20 3. 30 4. 50

15. வினைத்திறன் மிக்க சுண்ணாம்புச்சூளை ஒன்றில் 1000 கி.கி. சுண்ணாம்புக்கற்களை பூரணமாக தகனமடையும் வரை எரித்தால் கிடைக்கும் சுட்ட சுண்ணாம்பின் திணிவு
1. 56.கி.கி 2. 500 கி.கி 3. 560 கி.கி 4. 5600 கி.கி

16. வீட்டு மின்சுற்றில் பயன்படுத்தப்படும் வடத்தில் 7/1.0 என்ற குறியீட்டு இலக்கம் காணப்பட்டது. இவ்வடத்திலுள்ள தனிக் கம்பிகளின் எண்ணிக்கை?
1. 1 2. 7 3. 8 4. தரவுபோதாது.

17. இரு தளவாடிகள் ஒன்றுக்கொன்று சாய்வாக வைக்கும்போது உண்டான விம்பங்களின் எண்ணிக்கை 9 எனின் இரு ஆடிகளுக்கு மிடையிலான கோணத்தைத் தருக?
1. 60 பாகை 2. 72 பாகை 3. 36 பாகை 4.120 பாகை

18. பின்வரும் இலத்திரனியல் துணைச் சாதனங்களுள் எது pnp வகை மூவாயியின் நியமக் குறியீட்டைத் தருவது?




19. வளியில் ஒளியின் வேகம் 340 $ms^{-1}$ ஆயின் 680 Hz மீடிறனில் அதிரும் ஒரு பொருளினால் பிறப்பிக்கப்படும் ஒலி அலையின் அலைநீளம்
1. 680/340m 2. 340/680m 3. 680 x 340m 4. 1/2 x 680/340m.

20. பின்வருவனவற்றில் எது இனப்பெருக்கம் செய்யும் நிலக் கீழ் தண்டிற்கு உதாரணமாக அமையும்?
1. வல்லாரை 2. மூங்கில் 3. உருளைக்கிழங்கு 4. மரவள்ளி

21. தாவரப்பகுதிகளில் உணவுசேமிப்பை இனங்காண்பதற்கான சோதனையின்போது தரப்பட்ட மாதிரியுடன் செப்புசல்பேற்றுக் கரைசலையும், சோடியம் ஐதரொட்சைட்டுக் கரைசலையும் சேர்த்தபோது ஊதா நிறம் பெறப்படுமாயின் இம்மாதிரியில் அடங்கியிருக்கும் உணவுக்கூறு?
1. கொழுப்பு 2. வெல்லம் 3. புரதம் 4. மாப்பொருள்.

22. ஒரு குழிவாடியின் முனைவுக்கும் குவியத்துக்கும் இடையில் பொருள் ஒன்று வைக்கப்படும்போது தோன்றும் விம்பங்கள் பற்றிய பிழையான கூற்று.
1. ஆடிக்குப் பின்னால் தோன்றும். 2. நிமிர்ந்த விம்பம்.
3. மாயமான விம்பம். 4. உருச்சிறுத்தது.

23. $xAl(OH)_3 + yH_2SO_4 \longrightarrow Al_2(SO_4)_3 + zH_2O$
மேலே சமன் செய்யப்பட்ட இரசாயனச் சமன்பாடு தரப்பட்டுள்ளது. அதில் x,y,z ஆகியவற்றின் பெறுமானங்கள் முறையே?
1. 6,3,2 2. 3,6,2 3. 2,3,6 4. 2,6,3

24.




அருகில் காட்டப்பட்டுள்ள கூட்டுக்கப்பித் தொகுதியின் வேக விகிதம் யாது?
1. 1 2. 2
3. 3 4. 4

25. வினா 24 இல் தரப்பட்ட கப்பித் தொகுதியைப் பயன்படுத்தி சுமையை மேல்நோக்கி 3 மீற்றர் தூரம் உயர்த்துவதற்கு எத்தனம் பிரயோகிக்கும் இடத்தில் இழை எவ்வளவு தூரம் கீழ்நோக்கி இருக்கவேண்டும்.
1. 3 m 2. 6 m 3. 9m 4. 12m

26. திரவ நிரல் ஒன்றினால் பாத்திரத்தின் அடியில் தாக்கும் திரவ அமுக்கத்தில் செல்வாக்குச் செலுத்தாத காரணி?
1. திரவ நிரலின் உயரம். 2. திரவத்தின் அடர்த்தி.
3. புவியீர்ப்பு ஆர்முடுகல். 4. பாத்திரத்தின் வடிவம்.

27. சுருள் ஒன்றில் காணப்படும் மின்னியக்கவிசையில் செல்வாக்குச் செலுத்தாத காரணி?
1. சுருளின் முறுக்குகளின் எண்ணிக்கை.
2. காந்தவலிமை.
3. காந்தம் இயங்கும் வேகம்.
4. காந்தத்தின் வடிவம்.

28. பரம்பரை அலகுகளினால் அடுத்த சந்ததிக்குக் கடத்தப்படாத நோய் பின்வருவனவற்றுள் எது?
1. குருதி உறையாநோய். 2. நீரிழிவு.
3. தொண்டைக்கழலை 4. நிறக்குருடு.

29. வானொலிக்கருவியின் ஒலிக்கட்டுப்படுத்தியாகப் பயன்படும் இலத்திரனியல் துணைச்சாதனம்.
1. இசைவாக்கும் கொள்ளவி. 2. PnP மூவாயி
3. மாறும் தடையி 4. சீராக்கும் இருவாயி


30. பின்வருவனவற்றில் அகஞ்சுரப்பி அல்லாதது எது?
1. கபச்சுரப்பி 2. உமிழ்நீர்ச் சுரப்பி
3. அதிரினல் சுரப்பி 4. கேடயப்போலிச்சுரப்பி

31. தாவரஇலையில் ஒளித்தொகுப்பு செய்யமுடியாத கலம் பின்வருவனவற்றுள் எது?
1. காவற்கலம் 2. மேற்றோல்கலம்.
3. வேலிக்காற்புடைக்கலம் 4. கடற்பஞ்சுப்புடைக்கலம்.

32. யூரியாப் பசளையில் உள்ள நைதரசன் சதவீதத்தை அண்ணளவாகத் தருவது?
1. 21% 2. 46% 3. 36% 4. 24%

33. தாவர இலைகளில் தொகுக்கப்பட்ட உணவு, வேரினால் உறுஞ்சப்பட்ட நீர் ஆகியன கொண்டு செல்லப் பயன்படும் கட்டமைப்புக்களைச் சரியான ஒழுங்கில் தருவது?
1. காழ், உரியம். 2. உரியம், காழ்.
3. உரியம், மையவிழையம் 4. காழ், மையவிழையம்.

34. மாக்கிளையிலிருந்து நிலத்தில் சுயாதீனமாக வீழ்கின்ற ஒரு பழத்தின் இயக்கத்தை காட்டும் இடப்பெயர்ச்சி நேரவரைபு படத்தில் காட்டப்பட்டுள்ளவற்றுள் எது?




சற்குணநாதன் B.sc (Agri) Dip.in-Ed. (தொடரும்..)
யா/புத்தூர் சோமஸ்கந்தா கல்லூரி

இங்கே மடிக்கவும்



# மாணவர் மலர்



**மாணவர்களைப் பாடசாலைகளுக்குத் தேர்ந்தெடுப்பதற்கும், மாணவர்களுக்கு உதவிப்பணம் வழங்குவதற்குமாகத் தரம் 5 மாணவர்களுக்கு நடாத்தப்படும் மாதிரிப் பரீட்சை - 2003**

இல. 01 தொடக்கம் 05 வரையுள்ள வாக்கியங்களின் பொருத்தமான விடையின் கீழ்க் கோடுக.

01. பௌர்ணமியில் முழுமையாகத் தெரிவது.
1. நட்சத்திரம் 2. கோள் 3. சூரியன் 4. சந்திரன்

02. ஏர் பிடித்து வயல் உழுதோம் இதில் வயல் என்பது
1. வயல் 2. கலப்பை 3. கனனி 4. இயந்திரம்

03. குற்றம் இழைத்தவர்களுக்குக்கூட நாம் தீங்கு செய்யக்கூடாது. இதில் தீங்கு என்பது
1. துன்பம் 2. நன்மை 3. மகிழ்ச்சி 4. ஒற்றுமை

04. குறும்புக்காரச் சிறுவன் முதியவரைக் கிண்டல் செய்தான். இதில் கிண்டல் என்பது
1. துன்பம் 2. சந்தோசம் 3. கேலி 4. அடித்தல்

05. புலவர் பாரியைப் புகழ்ந்து பாடினார். இதில் உள்ள பாடினார் என்பது
1. எழுவாய் 2. பயனிலை
3. செயற்படுபொருள் 4. பன்மை

இல. 06 முதல் 08 வரையுள்ள வினாக்களில் வரும் குறியீடுகளை அவதானித்து வினாக்களுக்கு விடை எழுதுக.

பின்வரும் குறியீடுகள் குறிக்கும் சொல்லை புள்ளிக்கோட்டில் எழுதுக.

△ அ ∞ ந் X னி 8 த ○ ம் □ தி ▲ யு □ தா ◎

06. △ ▲ ∞ ▯ ....................

07. △ X ▲ ○ ....................

08. 8 ∞ □ ▲ ○ ....................

இல. 09 - 10 வரையுள்ள வினாக்களில் கீழே உள்ள படத்தை நன்கு அவதானித்து, விடையின் கீழ் கீறிடுக.

09.



கோடிடப்பட்டுள்ள பகுதி முழு உருவின் என்ன பின்னம்?
1. 3/8 2. 8/2 3. 2/10 4. 2/8

10. புள்ளிடப்பட்ட பகுதி முழு உருவின் என்ன பின்னம்?
1. 1/4 2. 3/8 3. 8/4 4. 6/8

11. 4635 கிராமை கிலோக்கிராம், கிராமில் எழுதுக.
....................

12. 29 ஐ உரோம எண்குறிகளில் காட்டுக.
....................

13. 500g தேயிலையின் விலை ரூபா 85.00 ஆயின், 1½ kg தேயிலையின் விலை யாது?
....................

14. கோலத்தை இனங்கண்டு வெற்றுக்கூட்டில் பொருத்தமான எண்ணை எழுதுக.
6, 13, 20, 27, ☐ ☐

15. கோலத்திலுள்ள பொருத்தமற்ற எண்ணைக்கண்டு புள்ளிக்கோட்டில் எழுதுக.
64, 36, 32, 16, 8 ....................

இலக்கம் 16 முதல் 20 வரையுள்ள வினாக்களிலுள்ள பிரச்சினைகளை விளங்கிக் கொள்க. அதன்படி கேட்கப்பட்டுள்ள வினாக்களுக்கு விடை எழுதுக.

1. V X ☐ / V X ☐ / 6 8 4
2. N X △ / V X ☐ / 5 3 3

16. X இன் பெறுமதி யாது? ....................

17. △ பெறுமதி யாது? ....................

18. N இன் பெறுமதி யாது? ....................

19. V இன் பெறுமதி யாது? ....................

20. O இன் பெறுமதி யாது? ....................

இலக்கம் 21 முதல் 25 வரையுள்ள வினாக்களை அவதானித்து விடை தருக.

**இரு விளக்கில் ஒரு விளக்காம் வெண்ணிலாவே**
**இராக்காலத்தொளி கொடுபாய் வெண்ணிலாவே.**

21. இப்பாடலில் உள்ள "இரு விளக்கு" எதனைக் குறிக்கிறது?
....................

22. வெண்ணிலா என்பதன் பொருள் யாது?
....................

23. "ஏர் பிடித்து வயல் உழுதோம்" இதில் ஏர் என்பதன் ஒத்த சொல்?
....................

24. இவ்வுலகிலே பெரிதாக விளங்கும் தருமம் எது?
....................

25. காந்தித்தாத்தா கண்ணிற் சிறந்தது எது என்று கூறுகின்றார்?
....................

இல 26 முதல் 29 வரை ஒத்தசொல் தருக.

26. ஞாலம்....................

27. இன்னல்....................

28. கருணை....................

29. பட்டம்....................

இல. 29 முதல் 33 வரையுள்ள வினாக்களில் உள்ள சொற்களுக்கு பொருள் விளங்க நான்கு சொற்களுக்கு குறையாத வாக்கியம் எழுதுக.

30. ஒளி ....................

31. ஒலி ....................

32. வலி ....................

33. வழி ....................

இல 34-38 வரையுள்ள வினாக்களுக்கு சுருக்கமான விடை தருக.

34. இலங்கையில் மிகப்பெரிய தாவரவியல் பூங்கா எங்குள்ளது?
....................

35. இலங்கையின் மிக உயர்ந்த நீர்வீழ்ச்சி எது?
....................

36. உலகின் மிகப்பெரிய பாலைவனம் எது?
....................

37. நத்தையின் முட்டையின் நிறம் யாது?
....................

38. பூமிக்கு மிக அண்மையில் உள்ள கோள் எது?
....................

இல 39 - 40 வரையுள்ள வினாக்களிலுள்ள படங்களில் சரியான ஒழுங்கு வரிசையைக் காட்டுகின்ற விடையின் கீழ் கோடிடுக.


39.



A B C D

1. B C D A
2. C A B D
3. B C A D
4. A D C B

40.



A B C D

1. B A C D
2. A C B D
3. B C D A
4. A C D B

கீழே தரப்பட்டுள்ள விவரணத்தைக் கவனமாக வாசித்து அதன் கீழுள்ள இல 41 முதல் 50 வரையான வினாக்களுக்கு பூரணமான விடை எழுதுக.

நாம் எப்பொழுதும் சுத்தமாக இருப்பதோடு, எமது வீட்டையும் சுற்றாடலையும் சுத்தமாக வைத்திருக்கவேண்டும். சுகமாக வாழ்வதற்குத் தூயகாற்று, தூயநீர், தூயஉணவு, தூயசூழல், என்பன அவசியமாகின்றன. சுத்தமாக இல்லாவிடின் சூழல்மாசடைந்து துர்நாற்றத்தை ஏற்படுத்தும் நுண்ணிய அங்கிகள் பல: உருவாகி, பெருகித் தொற்று நோய்களைப் பரப்பும்.
நாம் எமது உடலை நோய்வராமல் பாதுகாத்தல்வேண்டும். தினமும் குளித்தல், தோய்த்து உலர்ந்த ஆடைகளை அணிதல், கைகழுவிய பின்னர் சாப்பிடுதல், நகங்களைக் காலத்துக்குக் காலம் வெட்டுதல் போன்ற சிறந்த பழக்கவழக்கங்களை அனுசரித்தல் சாலச் சிறந்ததாகும்.

41. சுகமாக வாழ்வதற்கு அவசியமானவை யாவை?
..........................................................

42. சுத்தமாக இல்லாவிடின் யாது நிகழும்?
..........................................................

43. நாம் அனுசரிக்க வேண்டிய சிறந்த பழக்கவழக்கங்கள் எவை?
..........................................................

எதிர்ச் சொல் தருக?

44. சுத்தம் ..........................................

45. உலர்ந்த..........................................

ஒத்த சொல் தருக?

46. உணவு ..........................................

47. உடல் ..........................................

48. வைத்திருக்கவேண்டும் என்பதனை இறந்தகாலத்தில் எழுதுக?
..........................................................

49. நாம் எமது உடலை நோய்கள்வராது பாதுகாக்கவேண்டும் என்பதை ஒருமையில் எழுதுக?
..........................................................

50. இங்கு காணப்படும் பெயர்ச்சொல் ஒன்றினை எழுதுக?
..........................................................

51. இப்பந்தியில் காணப்படும் வினைமுற்று ஒன்றினை எழுதுக?
..........................................................

கீழே தரப்பட்டுள்ள சொல்லுக்குப் பொருத்தமான ஆங்கிலச் சொல்லினை (ஆங்கில எழுத்தில்) எழுதுக?

52. வீடு..........................................


53. தண்ணீர் (நீர்)..........................................

54. உணவு ..........................................

55. நோய் ..........................................

56 முதல் 65 வரையுள்ள வினாக்களுக்கு விடை எழுதுக?

56.





இவ்வெண் சட்டம் காட்டும் எண்ணை எழுதுக?
..........................................

57. XXXIII என்பதை அரபிய எண்ணில் எழுதுக.
..........................................

58 0.9ஐ பின்னத்தில் எழுதுக.
..........................................

59.



இவ்வுருவில் நிழற்றப்படாத பகுதியின் பின்னமென்ன?
..........................................

60. ............2800........ முன்னுள்ள எண்ணையும், பின்னுள்ள எண்ணையும் எழுதுக.

61.



இக்கடிகாரமுகப்பு காட்டும் நேரம் யாது?
..........................................

62. பாடசாலை ஒன்றில் 3175 மாணவரும், வேறொரு பாடசாலையில் 2125 மாணவரும் உள்ளனர். இரு பாடசாலைகளிலும் உள்ள மாணவரின் மொத்த எண்ணிக்கை யாது?

63.
```
 - 6 7 4 5
   3 2 □ 4
 ---------
```

வெற்றுக் கூட்டில் வரவேண்டிய எண்ணை எழுதுக.

64. 20 இற்குக் குறைந்த இரட்டை எண்களை (ஒழுங்காக) எழுதுக?
..........................................

இல. 65 முதல் 71 வரையுள்ள வினாக்களுக்கு சரியான விடையின் கீழ் கோடிடுக.

65. செடி வகைக்கு உதாரணமாக அமைவது
1. பூசணி 2. கத்தரி 3. பலா

66. காந்தியடிகள் பிறந்த இடம்
1. அடையாறு 2. குஜராத் 3. சேலம்

67. சத்தியசோதனை என்ற நூலை எழுதியவர்
1. பாரதியார் 2. மாகாத்மா காந்தி 3. திருவள்ளுவர்

68. வேறுபட்ட சொல்லைத் தெரிக
1. அழகு 2. எழில் 3. அலங்கோலம்

69. காந்தம் எப்போதும் நிற்கும் திசை
1. வடக்கு கிழக்கு 2. வடக்கு தெற்கு 3. தெற்கு மேற்கு

70. பூக்காத தாவரம் எது?
1. மல்லிகை 2. பைன் 3. கத்தரி

71. இலங்கையின் மிகப்பெரிய தாவரவியற் பூங்கா உள்ள இடம்
1. அநுராதபுரம் 2. கொழும்பு 3. பேராதனை

(தொடரும்...)

K.T.அம்பிகைபாகன் B.Ed Tamil Sp. Trd ஆசிரிய ஆலோசகர், மேல்மாகாணம்

இங்கே மடிக்கவும்



# கணிதம் II

## கல்விப் பொதுத் தராதரப் பத்திர சாதாரண மாதிரிப் பரீட்சை - 2003

ஆரை r ஆகவுள்ள ஒரு வட்டத்தின் பரப்பளவு $\pi r^2$, ஆரை r ஆகவும் உயரம் h ஆகவும் உள்ள ஒரு உருளையின் கனவளவு $\pi r^2 h$ உம் வளைபரப்பின் பரப்பளவு $2\pi rh$ ஆகும். $\pi = 22/7$ எனக் கொள்க.

01. (a) (i) சுருக்குக? $27^{-1/3} \times 64^{1/6}$

(ii) $\log_6(\log_2 64)$ பெறுமானத்தைக் காண்க?


(b) ரூ 4000 இற்கு வாங்கப்பட்ட பொருள் ஒன்று 20% இலாபம் வைத்து விலை குறித்தபின், விற்பனையின் போது 4% கழிவு வழங்கப்பட்டது ஆயின்,
(i) குறித்தவிலை.
(ii) விற்றவிலை.
(iii) இலாப சதவீதம் என்பவற்றைக் காண்க.

(c)

| புள்ளி | 15 | 16 | 17 | 18 | 19 | 20 |
|---|---|---|---|---|---|---|
| மீடிறன் | 1 | 3 | 7 | 8 | 6 | 5 |

இம் மீடிறன் பரப்பலின்,
(i) ஆகாரம் யாது?
(ii) இடையம் யாது?
(iii) இடையைக் காண்க?

(இடை= $\frac{\Sigma f(x)}{\Sigma f}$ ஐப் பயன்படுத்துக)





(d) O வையமையாகக் கொண்ட வட்டத்திற்குப் புள்ளி A இல் உள்ள ஒரு தொடலி XAY ஆகும். நாண் AB ஆனது OAY யின் இருகூறாக்கியாகும். உருவிற்காட்டப்பட்டுள்ளவாறு புள்ளி C வட்டத்தின் மீது உள்ளது. தரப்பட்ட வரிப்படத்தைப் பிரதிசெய்து பின்வரும் வினாக்களுக்கு விடைதருக.

(i) முக்கோணி OAB இருசமபக்க முக்கோணி எனக்காட்டுக?
(ii) $A\hat{O}B$ இன் பெறுமானத்தைக் காண்க?
(iii) $A\hat{C}B$ இன் பெறுமானத்தைக் காண்க?
(iv) $X\hat{A}C$ யிற்குச் சமமான கோணம் ஒன்றைப் பெயரிட்டு, உமது விடைக்கான நியாயங்களைக் கூறுக?

(e) (i) $P(A \cap B) = P(A) + P(B)$ எனின் A, B என்பன எப்படிப்பட்ட நிகழ்ச்சிகள் ஆகும்?
(ii) A,B ஆகிய இருவர் இலக்கிற்கு சுடும்போட்டியில் பங்கு பற்றுகின்றனர். a இலக்கிற்கு சுடும் நிகழ்தகவு 1/3 உம், B இலக்கிற்கு சுடும் நிகழ்தகவு 1/4 உம் ஆகும். இவ்விரு நிகழ்ச்சிகளும் சாரா நிகழ்ச்சிகள் எனின்,
(அ) இருவரும் இலக்கிற்குச் சுடும் நிகழ்தகவு?
(ஆ) இருவரில் ஒருவராவது இலக்கிற்குச் சுடும் நிகழ்தகவு என்பவற்றைக் காண்க?

(f). 0.5 cm தடிப்புள்ள தகடு ஒன்றிலிருந்து வெட்டி எடுக்கப்பட்ட ஆரைச்சிறை ஒன்றை படம் காட்டுகின்றது. ஆரைச்சிறையின் கோணம் 60 பாகை உம், ஆரை 84 cm உம் ஆகும். பின்வருவனவற்றைக் காண்க.
(i) சுற்றளவு
(ii) பரப்பளவு
(iii) கனவளவு




02. (i) ரூபா 7500 இற்கு 5% வட்டிப்படி 3 வருடங்களில் கிடைக்கும் வட்டியையும், தொகையையும் காண்க?
(ii) ரூபா 3500 ஐ 3% வட்டிப்படி 3 வருடங்களுக்கான கூட்டு வட்டியைக் காண்க?
(iii) ஆண்டுக்கு 20% எளியவட்டிக்கு கடனாகொடுக்கப்பட்ட பணம் எத்தனை ஆண்டுகளில் ஆரம்பத்தில் கடனாக கொடுக்கப்பட்ட பணத்தைப்போல் இருமடங்கான தொகையைக் கொடுக்கும்?
(iv) ஒருவர் ஆண்டுக்கு 10% வட்டிப்படி ரூபா 50 000 ஐ வங்கி ஒன்றில் இட்டு, நிலையான வைப்புக்கணக்கை ஆரம்பித்தார். கூட்டுவட்டிப்படி இரண்டு ஆண்டுகளின்பின் அவருக்குக் கிடைக்கும் மொத்தப்பணம் யாது?

03. ஒரு நேர்விளிம்பு, கவராயம், cm/mm அளவிடை ஆகியவற்றை மாத்திரம் பயன்படுத்தியும், அமைப்புக் கோடுகளைத் தெளிவாகக் காட்டியும்,
(i) AB=4.2cm, CD=4.3cm, $B\hat{D}C$=60பாகை, AD=3.3cm, BD=3.9 cm ஆகிய அளவுகளைக் கொண்ட நாற்பக்கல் ABCD ஐ அமைக்க?
(ii) ABCD என்ற நாற்பக்கலினதும், ADX என்ற முக்கோணியினதும் பரப்பளவுகள் சமனாகுமாறு நீட்டப்பட்ட பக்கம் ABயில் X என்ற புள்ளியைக்குறித்து ADX என்ற முக்கோணியை அமைக்க?
(iii) முக்கோணம் ABD இன் சுற்று வட்டத்தை அமைக்க?
(iv) ஆரையை அளந்து எழுதுக?

04. (a) கூட்டல் விருத்தி ஒன்றின் 7 ஆம், 12 ஆம் உறுப்புக்கள் முறையே 17, 27 ஆகும். முதல் உறுப்பு a, பொதுவித்தியாசம் d எனக்கொண்டு.
(i) பொருத்தமான சமன்பாட்டை எழுதுக.
(ii) a,d ஐக் காண்க?
(iii) முதல் 10 உறுப்புக்களின் கூட்டுத்தொகையைக் காண்க?

(b) குளம் ஒன்றில் குறித்த நாள் ஒன்றில் $2m^2$ பாசி படர்ந்திருந்தது. அப்பாசியானது தினமும் முதல் நாளைவிட 11/2 மடங்கு கூடுதலாக படர்கிறது எனின், அவதானித்த நாளில் இருந்து,
(i) 5 ஆம் நாள் படர்ந்திருந்த பாசியின் பரப்பளவு.
(ii) முதல் ஆறு நாட்களில் படர்ந்திருந்த பாசியின் அளவு என்பவற்றைக் காண்க?

05. (a) பின்வரும் ஒருங்கமை சமன்பாடுகளைத் தீர்க்க?
$x+3 = 2-y$
$2x+1 = 3y-1$

(b) பொருள் ஒன்றின் உற்பத்தியின்போது - மூலப்பொருளுக்கும் கூலிக்கும் இடையிலான விகிதம் 5:3 ஆகும் உற்பத்திச் செலவு ரூபா 2000 ஆகவுள்ள பொருளுக்கு,
(i) மூலப்பொருளுக்கான செலவு யாது?
(ii) கூலியின் அளவென்ன?
(iv) மூலப்பொருள் 12% இனாலும் கூலி 8% இனாலும் அதிகரித்தால் பொருளின் உற்பத்திச்செலவு யாது?

(தொடரும்...)

தொகுப்பு: N.S.K

நமது ஈழநாடு

267, Navalar Road, Jaffna.
T.P. - 021-2225107 www.eezhanadu.com

**சிந்தனைக்கு**

குடிபுறங் காத்துஓம்பிக் குற்றம் கடிதல்
வடுவன்று வேந்தன் தொழில்.

-திருக்குறள்.

## நமது நோக்கு

### பெண் ஜனாதிபதியின் ஆட்சியில் அவலத்திற்குள்ளாகும் பெண்கள்

பெண்கள் மீதான பாலியல் வல்லுறவு மற்றும் வன்முறைச் சித்திரவதைகளுக்கு சிறிலங்கா பேர்போன நாடுகளில் ஒன்றாக சாதனை படைத்து வருகிறது. கொழும்பு செய்திப் பத்திரிகைகளை அன்றாடம் பார்ப்போர் இதனை நன்கு புரிந்துகொள்வர்.

கிராமய மட்டத்திலிருந்து பெருநகரங்கள், ஏன் தலைநகர் மட்டம் வரை, பெண்கள் மீதான கொடுமைகள் மிகவும் சர்வசாதாரண வழமையான நிகழ்வுகளாகிவிட்டன.

இதற்கான காரணங்கள் குறித்து பலரும் பலமட்டத்திலும் ஆராய்ந்து வருகின்ற போதிலும், இதனை தடுக்க முடியாத நிலையே தொடர்வதுடன், இது குறித்து எடுக்கப்படும் நடவடிக்கைகள் யாவும் அர்த்தமற்ற - பயனற்ற முயற்சியாகவே போய்விடுவதற்கு சட்டம், ஒழுங்கு, பாதுகாப்பினை மேற்கொள்வோர் என அடையாளப்படுத்தப்பட்டவர்களே குறிப்பிடத்தக்க அளவில் இத்தகைய பெண்கள் மீதான குற்றச் செயல்களில் ஈடுபடுவதும் ஒரு காரணமாகும்.

சிறிலங்காவின் பாதுகாப்புப் படையினரும், பொலிஸாரும் இத்தகைய பெண்கள் மீதான வன்முறைச் செயற்பாடுகளின் மூலகர்த்தாக்களாக விளங்குகின்றனர் என்பதற்கு ஏராளமான சான்றுகள் உண்டு.

போர் நடவடிக்கையின்போது, பாதுகாப்பு காரணங்களைக் காட்டி இரவு வேளைகளிலும் சுற்றிவளைப்பு தேடுதல் சோதனை நடவடிக்கையென்ற பேரில், தமிழ் மக்களின் குடியிருப்புகளில் நுழைந்த பாதுகாப்புப்படையினர் சிலரால் பெண்கள் எவ்வாறெல்லாம் துன்புறுத்தப்பட்டார்கள், அவமதிக்கப்பட்டார்கள், பாலியல் ரீதியான கொடுமைகளுக்குள்ளாக்கப்பட்டார்கள் என்பதற்கு கடந்த இரு தசாப்த கால ஊடகச் செய்திகளும், நீதிமன்ற வழக்கு விசாரணைகளும் உறுதியான ஆதாரங்களாகும்.

ஜே.வி.பி காலத்து பிரேமாவதி மன்னம்பெரி முதல் யாழ்ப்பாணம் படையினர் வசமான போது நடைபெற்ற கிருஷாந்தி விவகாரம் வரை பிரபல்யமான பல அரக்கத்தனமான கொடுமைகள் இதனை உலகளவில் தெரியப்படுத்தினாலும் கூட, செம்மணி போன்ற மனிதப் புதைகுழிக்குள் மறைக்கப்பட்டுவிட்ட பெண்களின் கதைகள் ஏராளம்.

இத்தகைய கொடுமை புரிந்தவர்கள் அரசின்சட்டம், ஒழுங்கையும் தேசத்தின் பாதுகாப்பையும் பேணுகின்றவர்கள் என்பதுதான் வெட்கப்படவேண்டிய - அவமானப்படவேண்டிய விடயமாகும்.

இதெல்லாம் உலகத்தில் எங்கும் நடக்கும் விடயம் தானே என ஒரு சில பிரகிருதிகள் தட்டிக் கழிக்கவும் கூடும். ஆனால், இவையாவும் ஒரு பெண் ஜனாதிபதியாக இருக்கும் அவரே முப்படைத்தளபதியாகவும் இருக்கும், தம்மபதத்தின் வழி - பௌத்த தர்ம தார்மீகக் கோட்பாட்டின்கீழ் இயங்குவதாகப் "பீற்றிக்" கொள்ளும் ஒரு நாட்டில் நடைபெறுவது தான் தலைகுனிவை ஏற்படுத்தும் விடயம்.

சிறிலங்காவின் நிறைவேற்று அதிகார ஜனாதிபதியால் சர்வதேச அனுசரணையுடன் கூடிய சமாதான நகர்வைக் குழப்பமுடிகிறது. யுத்தத்திற்கு தயார் நிலையில் இருக்குமாறு படையினருக்கு உத்தரவிடமுடிகிறது. படைத்தலைமைகளை தன்னிஷ்டப்படி ஆட்டிப்படைக்க முடிகிறது. ஆனால், அவரால் பெண்களுக்கெதிராக, அதுவும் தமிழ்ப் பெண்களுக்கெதிராக, கொடுமைகளைப் புரிவோருக்கு எதிராக, சரியான கடுமையான நடவடிக்கைகளை மட்டும் எடுக்க முடியவில்லை.

குற்றவாளிகள் சரியாக இனங்காணப்பட்டாலும், அவர்கள் மீதான குற்றங்களுக்கான சான்றாதாரங்கள் நிறைய இருந்தாலும், நீதி விசாரணை இழுத்தடிக்கப்படுகின்றது. குற்றவாளிகள் தண்டிக்கப்படாது தப்புவதற்கான கால அவகாசம் வழங்கப்படுகிறது.

இதன் மூலம் நீதி அவமதிக்கப்படுகிறது!

நாட்டின் சட்டம், ஒழுங்கு கேலிக்குரியதாக்கப்படுகிறது.!

வேலியே பயிரை மேயும் போது, யாரிடம் யார் போய் நீதி கேட்பதாம்?

மன்னார் உயிலங்குளப் பகுதியில் பெண்ணொருவர் பொலிஸாரினால் பாலியல் வல்லுறவுக்குட்படுத்தப்பட்டுள்ளார்.

இதற்கு முன்னரும், மன்னாரில் இதேபோன்ற பெண்கள் பாலியல் வல்லுறவுக் கொடுமைகள் நிகழ்ந்தேயுள்ளன.


பாதுகாப்பு படையினர் என்ற பெயரில், பாதாள உலகத்தவர்கள் உருவாவதற்கான பயிற்சிகளை வழங்கி, அவர்கள் படையிலிருந்து தப்பியோடி சமூகவிரோத சக்திகளாகி, தென் பகுதியில் பெண்கள் மீதான வன்முறைகள் உட்பட, சகல விதமான சமூக விரோத செயற்பாடுகளையும், மேற்கொண்டு வரும் வேளையில் வடக்கு - கிழக்கில் ஆயுதப்படைகள் மற்றும் பொலிஸ் படையைச் சேர்ந்த சிலர் அதே வேலையை செய்வதுதான் கொடுமையானது.

இதற்கு பேரணிகளோ, மகஜர்களோ, கண்டனக் கூட்டங்களோ மேற்கொள்வது செய்திகளாகி மறந்து போகும் விடயங்களாகவே இருக்கும்.

இந்தக் கொடுமைகளை நிறுத்த, மனித மிருகங்களிடமிருந்து பெண்களைக் காக்க மாற்றுவழி தேட வேண்டிய காலகட்டமிதுவாகும். சட்டமும் - நீதியும் - நத்தை வேகத்திலும் நகராத நாட்டில் சமூகவிரோதிகளாக சகல மட்டத்திலும் உலாவுவோர் தொகை அதிகரிக்கும் என்பது உண்மை... அத்தகைய நாடு தசை வெறிகொண்டோரின் சொர்க்கபுரியாகவே இருக்கும்.

இத்தகைய கேவலங்கள் தொடரும் நாட்டிற்கு ஒரு பெண் ஜனாதிபதியாக இருக்கிறார் என்பது எவ்வளவு சோகமான விடயம்.

## நாடும் நடப்பும்




### படையதிகாரிகளை கொல்வதற்கு

# புலிகளுக்கு உதவியதாக செய்தி வெளியிட்ட பத்திரிகை மீது பொலிஸ் அதிகாரி வழக்கு!

பொலிஸ் பயங்கரவாத புலனாய்வுப் பிரிவைச் சேர்ந்த அதிகாரி ஒருவர், பாதுகாப்பு அதிகாரி ஒருவரைக் கொல்வதற்கு விடுதலைப்புலிகளுக்கு உதவியதாகச் செய்தி வெளியிட்ட திவயின பத்திரிகை மீது, குறிப்பிட்ட பொலிஸ் அதிகாரி, 50 இலட்ச ரூபாய் நட்டஈடு கோரி கொழும்பு மாவட்ட நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்துள்ளார்.

கல்கிசை பயங்கரவாதப் புலனாய்வுப் பிரிவைச் சேர்ந்த துரைரட்ணம் ஜெயரட்ணம் என்ற பொலிஸ் அதிகாரியே, திவயின வெளியிட்ட செய்தி தமது புகழுக்கு களங்கத்தை ஏற்படுத்தியதாக தெரிவித்து நட்டஈடு கோரி வழக்குத் தாக்கல் செய்துள்ளார்.

தான் 1979 ஆம் ஆண்டு பொலிஸ் சேவையில் சேர்ந்து கொண்டதாகவும், பொலிஸ்மா அதிபரிடம் இருந்து பல விருதுகளையும், சிறந்த பொலிஸ் அதிகாரிக்கான விருதுகளையும் பெற்றிருப்பதாகக் குறிப்பிட்ட இவர், கொலன்னாவ எண்ணெய்க்குதம் மீதான தாக்குதல், ஜனாதிபதி கொலை முயற்சி, லலித் அத்துலத்முதலி கொலை, உட்படப் பல சம்பவங்கள் குறித்து திறமையாகப் புலனாய்வு செய்திருப்பதாகவும் தனது மனுவில் குறிப்பிட்டுள்ளார்.

புலிகளுக்கு எதிரான செயற்பாடுகளில் தீவிரமாக உழைத்த தன்னை திவயின பத்திரிகை, கடந்த ஜூன் மாதம் 23 ஆம் திகதிய இதழில் படையதிகாரிகளை படுகொலை செய்ய உதவியளித்ததாக செய்தி வெளியிட்டு அபகீர்த்தியை ஏற்படுத்தியதாகவும், தனது மனுவில் தெரிவித்துள்ளார்.

# கூடியளவானோரை பேரணிக்கு திரட்டாததேன்? சுதந்திரக்கட்சி அமைப்பாளர்களிடம் கேள்வி!

## கட்சித் தலைமை நடவடிக்கை

(கொழும்பு)

கொழும்பில் கடந்த 24 ஆம் திகதி ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி நடத்திய அரச எதிர்ப்புப் பேரணியில் தமது தொகுதிகளில் இருந்து போதியளவான ஆதரவாளர்களைத் திரட்டி வராத நாடாளுமன்ற உறுப்பினர்களிடம் கட்சியின் தலைமையகம் விளக்கம் கோரியுள்ளது.

இந்தப் பேரணிக்கு ஒவ்வொரு தொகுதியில் இருந்தும், ஆகக்கூடியளவான மக்களைத் திரட்ட வேண்டும் என்றும், இதற்கான செலவாக ஒவ்வொரு நாடாளுமன்ற உறுப்பினர் மற்றும் கட்சி அமைப்பாளர்களுக்கும், கட்சித்தலைமை தலா 25ஆயிரம் ரூபா வீதம் வழங்கியிருந்தது.

பத்துலட்சம் பேரை இந்தப் பேரணியில் கலந்து கொள்ள வைப்பதற்காக பல மில்லியன் ரூபாவை கட்சி செலவிட்டிருந்தது. ஆனால், இந்தப் பேரணியில் ஒரு இலட்சத்திற்குக் குறைவானோரே பங்கேற்றிருந்தனர்.

இதனால் கட்சித் தலைமை அதிர்ச்சியடைந்துள்ளது. தொகுதி மட்டத்தில் மிகக் குறைவாகவே இந்தப் பேரணிக்கு ஆதரவு அளித்ததாக கிடைத்த தகவலில் இருந்தே சுதந்திரக் கட்சி தலைமை, நாடாளுமன்ற உறுப்பினர்கள் மற்றும் தொகுதி அமைப்பாளர்களிடம் விளக்கம் கோருவதெனத் தீர்மானித்துள்ளது.

அத்துடன் அந்தப் பேரணியில் பாண்ட்வாத்தியங்களையும் பயன்படுத்தக்கூடாது என ஆதரவாளர்களிடம் அறிவுறுத்தும்படி கட்சித் தலைமை சகல அமைப்பாளர்களுக்கு கண்டிப்பான உத்தரவு வழங்கப்பட்டிருந்தது.

ஆனால், இந்தப் பேரணியில் பாண்ட்வாத்தியக்கருவிகள் உபயோகிக்கப்பட்டமை குறித்தும் ஒழுங்கமைப்பாளர்களால் விசனம் தெரிவிக்கப்பட்டுள்ளது. இதனால் கட்சித் தலைமை இது குறித்து நடவடிக்கை எடுக்கவுள்ளதாகத் தெரியவருகிறது.

# பச்சோந்தி அரசாங்கத்தை அமைக்க ஜே.வி.பி ஒருபோதும் ஆதரவளிக்காது

## ரில்வின் சில்வா தெரிவிப்பு

(கொழும்பு)

அரசாங்கம் ஒன்றை இலகுவாகவும், மலிவாகவும் தோற்றுவிக்க சிலர் முயற்சி செய்கின்றனர். ஆனால், இவ்வாறான மலிவானதொரு அரசாங்கத்தை அமைப்பதற்கு ஜே.வி.பிக்கு எந்தத் தேவையும் கிடையாது என்று, ஜே.வி.பியின் செயலாளர் ரில்வின் சில்வா தெரிவித்தார்.

கொழும்பு விகாரமாதேவி பூங்காவில் நடந்த கூட்டம் ஒன்றில் உரையாற்றிய போதே ஜே.வி.பியின் செயலாளர் ரில்வின் சில்வா இவ்வாறு தெரிவித்தார்.

ஐக்கியதேசியக் முன்னணித் தலைவர்களை தோற்கடிப்பதற்கு எந்வொரு சக்தியுடனும் சேர்ந்து உழைப்பதற்கு ஜே.வி.பி தாயாராக உள்ளது. ஆனால், இந்த அரசாங்கத்தை தோற்கடித்த பின்னர் வரக்கூடிய புதிய அரசாங்கம் நீலநிறக் கட்சி ஆட்சியாக இருக்கக் கூடாது.

ஜே.வி.பியின் கொள்கைக்கு அமைவாகத் திட்டமிட்டதொரு அரசாங்கமே உருவாக்கப்படவேண்டும். தற்போது ஆட்சியில் உள்ள ஐக்கிய தேசிய முன்னணி அரசாங்கத்தை தோற்கடிப்பதற்கு தனிப்பட்ட காரணங்கள் எதுவும் கிடையாது.

புதிதாக கணக்கிடப்படும் அரசாங்கம் நாட்டைக் கட்டியொழுப்புவதற்கான தெளிவான திட்டம் ஒன்று இருத்தல் வேண்டும். நாட்டின் நலனைக் கருத்தில் கொண்டு செயற்படும் அரசாங்கமாக இருப்பது அவசியம். மாறாக பச்சோந்தி அரசாங்கத்திற்கு ஜே.வி.பி ஒருபோதும் ஆதரவு வழங்கமாட்டாது என்று அவர் மேலும் தெரிவித்தார்.


# தமிழினத்தின் பரம்பரைச் சொத்தான

# கூத்து இலக்கியம்

**திருமறைக் கலாமன்றம் அண்மையில் ஈழத்துக் கூத்து இலக்கிய விழாவொன்றை நடாத்தியிருந்தது. அந்த நிகழ்வின்போது ஈழத்தின் பல பாகங்களிலுமிருந்து யாழ்ப்பாணத்துக்கு வருகை தந்திருந்த கூத்துக் கலைஞர்கள் உரையாற்றியிருந்தார்கள். அவர்களின் உரைகளிலிருந்து தொகுக்கப்பட்ட முக்கிய விடயங்கள் இங்கு தொடர்ந்து பிரசுரமாகவுள்ளன.**

*(சென்றவாரத் தொடர்ச்சி)*

அதன் பின்னர் பல சடங்குகள் இருக்கும். உதாரணமாக "அருச்சுனன் தபசு" அரங்கேற்றப்படுவதாக இருந்தால், அரங்கேற்றத்திற்கு இரண்டு நாட்களுக்கு முன்னர், கூத்துக் கலைஞர்கள் காடுகளுக்குச் சென்று, அருச்சுனன் தவம் இயற்று வதற்கான 65 அடி நீளமான மரத்தைத் தேர்ந்தெடுத்துக் கொண்டுவர வேண்டும். இந்தப் பணிக்காகக் கூத்திலே பங்குபெறும் கலைஞர்களிடம் இருந்தே சிலர் தெரிவுசெய்யப்படுவார்கள். இவர்கள் கூத்திற்கான மரம்வெட்டும் நாளின் போது விரதமிருப்பார்கள். பின்னர் காட்டிற்குச் சென்று பொருத்தமான மரத்தை வெடடிவந்து, கூத்து ஆடப்



படும் களத்திலே வைத்தபின்பே, தமது விரதத்தை முடித்துக் கொள்வார்கள்.

அடுத்து இந்த மரம் நடப்படும் விழா நடைபெறும். இது ஊர் மககள் அனைவரிற்கும் அறிவிக்கப்படும். ஊர்மக்கள் திரண்டுவந்த பின்னே, விசேடபூசை வழிபாடுகள் இடம் பெறும். பின்னர் 5 அடி ஆழமாகத் தோண்டப்பட்ட குழியினுள் இந்த மரம் நாட்டப்படுகின்ற நிகழ்வு இடம் பெறும். அன்றைய தினமும் கூத்துக் கலைஞர் அனைவரும் விரதமிருப்பார்கள்.

மூன்றாவது விரதம் கூத்து ஆடப்படும் அன்று அனுஷ்டிக்கப்படும். அன்று கூத்துக் கலைஞர்கள் தத்தம் வீடுகளில் இருந்துகொண்டு மதியம்வரை விரதம் இருப்பார்கள். பின் விரத்தை முடித்துக் கொண்டு, குடும்பத்தவர்களால் கூத்து ஆடப்படுவதற்காக வழியனுப்பி வைக்கப்படுவார்கள்.

ஊரிலே உள்ள பெரியவர்கள், மதிப்புமிக்கவர்கள். கூத்து அரங்கேற்றத்திற்கு விருந்தினர்களாக அழைக்கப்புட்டு, அவர்கள் மேடையில் இருக்கும் போதே இந்தக் கூத்து ஆடப்படும்.

கூத்து ஆரம்பமாவதற்கு முன்பாக மேடையில் முதற்காட்சிக்குரிய கலைஞர்கள் அனைவரும் வந்து நிற்கும்போது, ஒரு விசேடபூசை நடைபெறும் இது "முதற்பூசை" என அழைக்கப்படும். இதனைப் பார்வையாளர்கள் காணமுடியாதவாறு திரைகொண்டு மறைக்கப்படும். ஆனாலும், ஊர்மக்கள் அனைவரும் தாம் இந்த முதற்பூசையிலே கலந்து கொள்ள வேண்டும் எனும் உணர்வோடு திரண்டு வந்து, பூசை நடைபெறும் போது தமது நேர்த்திகளையும் அந்த இட த்திலே ஆண்டவனிடம் முறையிடுவார்கள்.

பின் அருச்சுனன் தவம் முடித்து இறுதியிலே மரத்தை விட்டு இறங்கி வருகின்ற போது, தமது குறைகளை அவனிடம் கூறி, வரம் பெறுவதன் மூலம் தமது குறைகள் தீரும் எனும் ஐதீகம் - மலையகப் பிரதேசத்திலே அன்று இருந்தது.

முதற்பூசை முடிந்ததும், காப்பு பாடல்கள் பாடப்படும். காப்பு பாடல்கள் நிறைவு பெற்றதும் திரை விலக, பார்வையாளர்கள் அனைவரும் "அரோகரா" என உரத்த குரலிலே கூறிய பின்னர் கூத்து ஆரம்பமாகும்.

வாத்தியார் பாடல்களை பாட, பக்கவாத்தியக்காரர் பின்னணி இசை அமைக்க கூத்து மேடையிலே தொடர்ந்து நடந்துகொண்டிருக்கும். கூத்து தொடர்ந்து நடைபெறுவதால், பாடிக்கொண்டிருக்கும் வாத்தியார் களைப்படைந்து விடுவார். அவரது களைப்பை போக்குவதற்காக இடையிலே "வவுண்" எனப்படும் ஒரு பாத்திரப்படைப்பு மேடையேற்றப்படும். இந்த "வவுண்" ஆனது தோற்றத்திலும், செய்கைகளிலும் நகைச்சுவை தன்மை மிக்கவராக காணப்படுவார். ரசிகர்கள் கூட சில சந்தர்ப்பங்களில் சோர்வடைந்தால், அவர்களையும் உற்சாகப்படுத்துவதாக இந்த பாத்திரப் படைப்பின் தன்மை அமைந்திருக்கும்.

அனேகமாக இந்த பாத்திரம் மூலம் கூறப்படுகின்ற கருத்துக்கள் நகைச்சுவையோடு சேர்ந்து கூறப்படுவதால், மக்களிற்கு புரிவது இலகுவாக இருக்கும். மக்கள் அந்த பின்னணிகளை விளக்கிகொள்வார்கள். பொதுவாகத் தோட்டங்களில் உள்ள துரைமார், கணக்குப் பிள்ளைகள், கண்காணிமார் ஆகியோருடைய ஊழல்களையும், அடாவடித்தனங்களையும் புட்டுவைத்து மக்களை விழிப்படைய செய்வதாகவே இந்த "வவுண்" அமைந்திருக்கும். ஆளுவோர்களுக்கு எதிரான, ஆளப்படுவோரின் குரலாக இவர் தொனிப்பார்.

இதனால் வேலைத்தளங்களிலே தமது முரண்பாடுகளைக் கூறமுடியாது, ஒடுக்கப்பட்ட மலையக மக்கள் இந்த பாத்திரத்தின் மூலம் அவை வெளிப்படுத்தப்படும்போது ஆறுதல் அடைவார்கள். இதன் மூலமாக அவர்களுடைய மனச்சுமை குறைந்ததாகக் கருதுவார்கள்.

கூத்து நடைபெற்று கொண்டிருக்கின்றபோது, இடையிலே தெய்வாம்சம் பொருந்திய பாத்திரங்களை உதாராணமாக காளி, மாரி அம்மன், சிவன் போன்றவை தோன்றுமிடத்தும் - விசேட பூசைகள் நடைபெறும். இதன் போது, தூங்கிய சிறு குழந்தைகள்கூட தட்டி எழுப்பப்படுவார்கள். "பூசை நடக்கிறது எழும்பு" என அந்த பூசையிலே கலந்து கொள்ள வேண்டும் என நித்திரையால் எழுப்பப்படுவார்கள்.

பின் கூத்து தொடர்ந்து நடைபெறும். அருச்சுனன் தபசைப் பொறுத்த வரையிலே, அருச்சுனன் தவம் இயற்றச் செல்லும் போது, ஏழுமலைகளைத் தாண்டிச் செல்வதற்காக கூறப்படுகிறது. ஆனால் மகா பாரதத்திலே அவன் இமய மலையைத் தாண்டி இந்திரநீல மலைக்கு சென்று, தவம் புரிந்ததாக இலக்கியச் சான்று இருந்தாலும், கூத்திலே ஏலக் கன்னி வனம், மோகினி வனம், பேரண்டன் வனம், பிராமண வனம், ரட்சகன் வனம், போன்ற பல வனங்களைத் தாண்டுவதாக கூறப்படுகிறது.

நேரக்கட்டுப்பாட்டை கருத்திலே கொண்டு, சில வேளைகளில் இவை சுருக்கப்பட்டு ஓரிரண்டாக குறைக்கப்படுவதும் உண்டு.

அருச்சுனன் தபசினுடைய இறுதிக் காட்சி - மிகவும் சுவாரசியமானது. இது மேடையை விட்டு விலகி, வெளிக்களம் ஒன்றிலே இடம்பெறும். அருச்சுனன் தவம் இயற்ற மலையேறும் காட்சி. இது "வட்ட களரி" முறையிலே ஒழுங்கு செய்யப்பட்டு, அதாவது மக்கள் அனைவரும் சுற்றி நின்று ரசிக்க நடுவிலே ஆற்றுகை நிகழ்த்தப்படும்.

இதன் போது 60 அடி நீளமான அந்த மரத்தைச் சுற்றி 108 படிகள் கட்டப்பட்டிருக்கும். ஒவ்வொரு படியிலும் பாட்டுப் பாடியவண்ணம் அருச்சுனன் ஏறிச்சென்று, ஏறக்குறைய ஒரு மணி நேரம் தவம் இயற்றுவார்.

அதிகாலைவேளை, வானத்திலே பறவைகள் பறக்கத் தொடங்கியதும் முதலாவது பறவையைக் கண்டவுடன் மக்கள் "பட்சி பறக்கிறது பட்சி பறக்கிறது" என குரல் எழுப்புவார்கள். அப்போது சிவன் வருவதாகவும், பாசுபதஅஸ்திரத்தை அருச்சுனனிற்கு கொடுப்பதாகவும் நம்பப்படுகிறது. பின் அருச்சுனன் கீழே இறங்கி வருவார். வந்ததும் ஒரு விசேடபூசை இடம்பெறும். அதன்பின் வரம் கேட்பவர்கள் அருச்சுனனிடம் வரம் பெறுவார்கள். அருச்சுனன் வீபூதி கொடுக்கும்போது, மலையக மக்கள் அனைவரும் முடிண்டியடித்து கொண்டு அதனை பெற நிற்பார்கள்.

ஒட்டு மொத்தமாகப் பார்த்தால் அனைத்து கூத்துக்களும் இறை நம்பிக்கை வயப்பட்டதாகவும், தெய்வாம்சம் பொருந்தியதாகவுமே காணப்படுகின்றன. இவ்வாறுதான் அன்றைய சமூகநிலை மட்டங்களிலே கூத்துக்கள் பேணப்பட்டுவந்தன.

*(தொடரும்)*

**தொகுப்பு: இ.சர்வேஸ்**

# ஜனாதிபதி சந்திரிகாதொடங்கியுள்ள போர்நாடகத்தால் தற்போதைய சமாதான முயற்சிகள் பாதிப்படையுமா?



கழுதை தேய்ந்து கட்டெறும்பான கதையாக, சந்திரிகாவின் அரசியல் லாபத்திற்கு தற்போதுள்ள சிங்கள தேசத்திலான அமைதியும், தமிழர் தேசத்திலான அரைகுறை அமைதியும் இல்லாமல் போகச் செய்ய ஏற்பாடுகள் மேற்கொள்ளப்படுகின்றன.

போர்நிறுத்தத்தில் - சம்பவங்கள் தொடர்பில் முடிவெடுக்கும் அதிகாரத்தை சந்திரிகா முப்படைகளுக்கும் வழங்கியதன் மூலம், அமைதியைக் குலைக்க முயல்கிறார். ஏற்கனவே தமிழர் தாயகத்தில் அமைதி என்பது அரைகுறையாகவேயுள்ளது.

கடலில், சந்திரிகாவின் இயக்கத்தில் கடற்படையினர், போர்நிறுத்தக் கண்காணிப்புக்குழுவினை ஓரங்கட்டுவதற்கான நாடகம் ஒன்றை அரங்கேற்றினர். கடலில் விடுதலைப் புலிகளின் ஆயுதக்கப்பல் நிற்பது தமது ராடரில் தெரிந்ததாகக் கூறி, வழமைக்கு மாறாக கண்காணிப்புக் குழுவின் பிரதிநிதியைத் தமது கப்பலில் கொண்டுசென்ற கடற்படையினர், கப்பல் குறித்த இடத்தில் காணாமல் போனது எனவும், இதனை கண்காணிப்புக் குழுவின் அதிகாரி - செய்து கொண்ட தொலைபேசி செய்தி மூலம் கண்காணிப்புக் குழு தலைமையகம் ஊடாக விடுதலைப்புலிகளுக்கு தெரிவித்து கப்பலை இடம்மாற்றினார் எனவும் கதை ஒன்றின் மூலம் வெளிப்படுத்திய தனையடுத்து நெருக்கடி நிலை தோன்றியது. கண்காணிப்புக்குழு அரசுக்கு சார்பாக நடக்கவில்லை என நவீன நாடகத்தில் திடீரென நுழையும் பாத்திரம் போல் சந்திரிகா அதிரடி அறிக்கையை விட்டு, கண்காணிப்புக் குழுத் தலைவர் மேஜர் ஜெனரல் ரெலவ்சனை மாற்றவேண்டும் என்று, நோர்வே பிரதமருக்கு அவசர கடிதம் ஒன்றையும் அனுப்பினார். இங்கு முன்னைய கண்காணிப்புக் குழுத் தலைவர் செயற்படுபவர் என்பதும் இதற்குக் காரணமாகும். சந்திரிகாவை நோர்வே ஒரு பொருட்டாகவே எடுக்கவில்லை என்பதை, நோர்வே அவரது கடிதத்தை நிராகரித்ததை வெளிப்படுத்தியது. இதைவிட - கடலில் நடந்த சம்பவத்திற்கு எந்த ஒரு சாட்சியுமில்லாத நிலையில், சந்திரிகா ஆவேசம் கொண்டது ஒரு அரசியல் நாடகம் என்பது வெளிப்பட்டது.

இதைவிட, நடந்த சம்பவம் பற்றிய உண்மைகளை ஆராயாது ஸ்ரீலங்கா பாதுகாப்பு அமைச்சர் திலக்



மாரப்பன, கடற்கலங்களில் கண்காணிப்புக் குழுவின் பிரதிநிதிகள் தொலைபேசிகளைக் கொண்டுபோக முடியாது என்றார். எதுவித தொலைத்தொடர்புக் கருவிகளும் இல்லாமல், கடலில கண்காணிப்புக் குழு பிரதிநிதிகள் எப்படி முடிவுகளை எடுக்க முடியும். தொலைத்தொடர்புக் கருவிகளின்றி கடற்கலங்களில் கண்காணிப்புக்குழுவின் பிரதிநிதிகள் செல்வதைவிட செல்லாது விடுவது சரியானதாக இருக்கும். இதைவிட கடற்படைத்தளபதியும், சந்திரிகாவும் கடற்கலங்களில் கண்காணிப்புக் குழுவினர் செல்லக் கூடாது என்ற முடிவையும் அறிவித்தனர்.

அவர்களைப் பொறுத்தவரை கடலில் தாம்தான் தனிச் சண்டியராக இருக்கவேண்டும் என்பதில் உறுதியாக இருப்பது தெளிவாகத் தெரிகிறது.

மீனவர்களை தாக்குவது முதல் கடற்புலிகளைத் தாக்குவதுவரை தாம் சுதந்திரமாக செயற்படவேண்டும் என்பது கடற்படையின் நோக்கம். கடற்படையின் நோக்கம் என்பதைவிட, கடற்படைப்பிரிவின் கூட்டு நாடகமே இதுவாகும். நோர்வே அரசு சந்திரிகாவின் கடிதத்தை நிராகரித்ததையடுத்து, முப்படைகளின் தளபதி தான் என்ற அதிகாரத்தைப் பயன்படுத்தி, நடக்கும் சம்பவங்களுக்கு கண்காணிப்புககுழுவினை எதிர்பாராது, படையினரே முடிவுகளை எடுக்கவேண்டும் என்ற கட்டளையை பிறப்பித்துள்ளார். குறிபபாக - கடற்படைத் தளபதி தன் தளபதிகளுக்கு கண்காணிப்புக்குழுவை எதிர்பாராது முடிவுகளை எடுக்குமாறு கட்டளையிட்டுள்ளார். இதனை உள்ளடக்கிய செய்தி விடுதலைப் புலிகளின, இழுவைப் படகுகளையும் தாக்கி அழித்தது போல், செயற்படுங்கள். உங்களுக்குப் பூரண அதிகாரம் தரப்பட்டுள்ளது என்பதாகும். ஆனால், என்ன நடக்கப்போகின்றது. அரைகுறை அமைதியும், எப்படி அழியப்போகின்றது என்பதற்கான கட்டியமே இது எனபது புலபபடுகின்றது.

இந்தச் சூழலில் சந்திரிகாவிற்கு ஆத்திரமூட்டிய செயல் அவரது சொல்லைக் கண்காணிப்புக் குழு கேட்காமலேயே நடுநிலமையாகவே செயற்படுவதேயாகும். இவர்கள் தமது செயற்பாடு தொடர்பான முடிவு விடுதலைப்புலிகள் - ரணில் விக்கிரமசிங்க அரசு, நோர்வே ஆகியவற்றின் கூட்டமைப்பாலேயே ஆராயப்பட்டு எடுக்கப்படவேண்டும். ஒரு தரப்பு இடும் கட்டளைகளுக்கு, கண்காணிப்புக்குழு பணியமுடியாது. அதனாலேயே கண்காணிப்புக்குழு தமது நடவடிக்கை வழமைபோல் நடக்கும் என்கிறது. அதற்கு விடக்கூடாது எனப் படைத்தரப்பு தளபதிகளுக்கு கட்டளையிட்டிருக்கிறார் சந்திரிகா.

சந்திரிகா குமாரதுங்க திடீரென இந்த முடிவினை எடுத்து சண்டமாருதம் புரிவதன் பின்னனி என்ன என்பதைப் பார்க்கவேண்டும்.

சந்திரிகாவின் அரசியல் செல்வாக்கு முற்றுமுழுதாக சிங்கள தேசத்தில் வீழ்ச்சியடைந்து வருகின்றது. தீபாவளியன்று சிங்களப் பேரணி இதனை அப்பட்டமாக வெளிப்படுத்தி நிற்கின்றது. இப்பொழுது தன் செல்வாக்கை நிமிர்த்த முடியாத நிலையில் சந்திரிகா உள்ளார்.

நாட்டின் பாதுகாப்புக்காக- என்ற பெயரில் இந்த நாடகத்தை ஆடி, அதனை நிருபிக்க உடனடி அக்



கறை செலுத்துவதையடுத்து இப்போதைய அவரது சண்டமாருதம் அமைதி நடவடிக்கைகளில் ரணில் விக்கிரமசிங்க அமெரிக்க மேற்குலகம் மற்றும் கிழக்கு ஆகிய பக்கங்களை தன்பால் ஈர்த்து வைத்திருக்கிறார்.

சந்திரிகா - இந்தியாவை தன்பக்கம் வைத்திருந்தார். ரணில் விக்கிரமசிங்காவின் அரசியல் சந்திரிகா விடமிருந்து இந்தியாவினையும் பறித்துள்ளது. இந்தியா மீதான சந்திரிகாவின் செல்வாக்கு வீழ்ந்து விட்டது.



இந்தச் சூழ்நிலையில் சந்திரிகாவுக்கு கிடைத்த ஆயுதம் கடற்படையே அவரது கட்டளைகளை ஏற்று நடக்கும் விசுவாசம், அந்தக் கடற்படையைப் பயன்படுத்தி நாட்டில் தன் செல்வாக்கை நிமிர்த்தவும், அமைதியையழிக்கவும் முடிவெடுத்து நிற்கிறார் அவர்.

சந்திரிகாவின் இந்தப் போர்நாடகம் நாட்டில் அரைகுறை அமைதியையும்கூட அழித்துவிடும் ஆவேசத்தில் உள்ளது.

இப்பொழுது கடைசியாக கடற்படைப் படகுகளில் கண்காணிப்புக் குழு செல்லவேண்டும் என்ற நடைமுறையை விலக்க, கடற்படை ஒரு நாடகத்தை அரங்கேற்றியுள்ளது. இதன் இயக்குனர் ஜனாதிபதி சந்திரிகா, நடிகர்கள் கடற்படையினர். கடைசியாக போர்நிறுத்தக் கண்காணிப்புக்குழுத் தலைவரை மாற்ற ஒரு நியாயத்தை உண்டாக்கவும் இந்த நாடகத்தை சந்திரிகா பயன்படுத்த முனைகிறார். கண்காணிப்புக் குழு சந்திரிகா கூறுவதுபோல் நடந்தால், அது கண்காணிப்புக்குழு என்ற மதிப்பை இழந்துவிடும்.

**தி.தவபாலன்**

# ஈராக்கிலிருந்து சர்வதேச தொண்டு நிறுவனங்களை வெளியேறவேண்டாமென அமெரிக்கா கோரிக்கை!



ஈராக்கில் பணிபுரியும் சர்வதேச உதவி நிறுவனங்களை - ஈராக்கிலிருந்து வெளியேறவேண்டாமென, அமெரிக்க அரசாங்கம் வேண்டுகோள் விடுத்துள்ளது.

ஈராக்கில் அமைந்துள்ள சர்வதேச செஞ்சிலுவைச் சங்கக் கட்டடம் நேற்றுமுன்தினம் தாக்கப்பட்டு 12 பேர் கொல்லப்பட்ட சம்பவத்தின் பின்னர் ஈராக்கிலிருந்து வெளியேறுவது தொடர்பாக செஞ்சிலுவைச் சங்கம் ஆலோசித்துவருவதாகக் கூறப்படும் நேரத்தில், அமெரிக்க இராஜாங்கச் செயலர் கொலின் பவல் மேற்படி வேண்டுகோளை விடுத்துள்ளார்.

ஈராக்கிலிருந்து சர்வதேச நிறுவனங்கள் வெளியேறுவது - தீவிரவாதிகளுக்கு வெற்றியாக அமைந்துவிடும் என்றும், அவர் கூறியுள்ளார்.

ஆனால், பவலின் கருத்துக்களை ஆதரிக்கும் நிலையில் ஈராக்கில் பணிபுரியும் சர்வதேச அமைப்புக்கள் இருக்கவில்லை என்று, பி.பி.ஸி செய்தியாளர் ஜில் மைக்கிவெறிங் தெரிவித்தார்.

இதேவேளை, 140 ஆண்டுகளாக மனிதநேயப் பணிகளில் ஈடுபட்டு வரும் நடுநிலையான அமைப்பான சர்வதேச செஞ்சிலுவைச் சங்கம் தற்கொலைக்குண்டுத் தாக்குதலுக்கு உள்ளானது இதுவே முதற்தடவை என, செஞ்சிலுவைச் சங்க உயரதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

பக்தாத்தில் கடந்த ஓகஸ்ட் மாதம் ஐக்கிய நாடுகளின் தலைமைக் காரியாலயம் மீது மேற்கொள்ளப்பட்ட தாக்குதலின்போது, ஐ.நாவின் முக்கிய பிரமுகர் ஒருவர் கொல்லப்பட்டதைத் தொடர்ந்து - ஈராக்கில் சர்வதேச அமைப்புக்கள் தமது பணிகளை குறைத்துக்கொண்டமை குறிப்பிடத்தக்கது.

## மீட்புப் பணியில் அமெரிக்க, ஈராக் படையினர்

(பக்தாத்)

ஈராக்கில் நேற்றுமுன்தினம் குண்டுத் தாக்குதலுக்கு இலக்கான செஞ்சிலுவைச் சங்கக் கட்டடத்தின் இடிபாடுகளுக்கிடையில் சிக்குண்டுள்ள மனித உடற்பாகங்களை மீட்கும் பணியில் - அமெரிக்கப் படையினரும், ஈராக்கியப் படையினரும் ஈடுபட்டுள்ளனர். இறந்தவர்களின் உடற்பகுதிகள் பிளாஷ்ரிக் பைகளில் சேகரிக்கப்படுவதாக படைவீரர் ஒருவர் தெரிவித்தார்.

இதேவேளை, குண்டுவெடித்த பகுதியிலுள்ள தண்ணீர் விநியோகிக்கும் குழாய்களும் உடைந்துபோயுள்ளதால், அப்பகுதி முழுவதும் வெள்ளத்தால் நிரம்பியுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

## காஷ்மீரில் பொலிஸார் தாக்குதல்; போராளி ஒருவர் பலி!

(காஷ்மீர்)

இந்தியாவின் காஷ்மீர் மாநிலத்தில் பொலிஸாரின் தாக்குதலில் போராளி ஒருவா கொல்லப்பட்டார்.

'செய்யூர் றெ'.மான் பாஜ்வா' எனப்படும் இஸ' புல்மயுகிடீன் இயக்கத்தை சேர்ந்த போராளியே சுட்டுக் கொல்லப்பட்டவராவார்.

கடந்த 11 ஆண்டுகளாக, இவர் தீவிரமாகப் போராடிவந்துள்ளதாக, பொலிஸ் தலைமை அதிகாரி ரசிந்திரா தெரிவித்தார்.

இதேவேளை - காஷ்மீர் பள்ளத்தாக்கில், இந்தியப் படை 56 வருடங்களாக நிலை கொண்டிருப்பதை எதிர்த்து கடந்த திங்கட்கிழமை வேலை நிறுத்தம் ஒன்று நடாத்தப்பட்டது.

# நேற்றும் ஈராக்கில் கார்க் குண்டுவெடிப்பு: ஐவர் பலி; அமெரிக்க அதிகாரிகள் அதிர்ச்சி!



ஈராக்கின் பலூஜா நகரில் நேற்று இடம்பெற்ற கார்க்குண்டுவெடிப்புத் தாக்குதலில் தற்கொலைக் குண்டுதாரியும், நான்கு பொதுமக்களும் கொல்லப்பட்டனர்.

தலைநகர் பக்தாத்திற்கு 50 கிலோமீற்றருக்கு மேற்காகவுள்ள பலூஜா நகரின் பிரதான பொலிஸ் நிலையத்திற்கு அருகிலேயே இந்தத் தாக்குதல் இடம்பெற்றது.

இந்தத் தாக்குதல் இடம்பெற்ற பகுதிக்கு மிக அண்மையில் மின்சார நிலையமொன்றும், பாடசாலை ஒன்றும் அமைந்துள்ளது என்றும் தாக்குதல் நடைபெற்றபோது பாடசாலை மூடப்பட்டிருந்தமையால் சேதங்கள் குறைவாக இருந்ததாக அங்கிருந்து கிடைக்கும் செய்திகள் தெரிவிக்கின்றன.

இந்தத் தாக்குதல் இடம்பெற்ற பகுதியை சுற்றிவளைத்துள்ள அமெரிக்கத் துருப்புக்கள் அந்தப் பிரதேசத்திற்குள் வெளியார் நுழைவதற்குத் தடைசெய்துள்ளனர்.

35 பேரைப் பலிகொண்டு 224 பேரைப் படுகாயப்படுத்திய தொடர் குண்டுத் தாக்குதல்கள் இடம்பெற்ற மறுதினமான நேற்று இந்தத் தாக்குதல் நடந்துள்ளது குறிப்பிடத்தக்கது.

தற்கொலைக் குண்டுதாரிகள் வெளிநாட்டு இலக்குகளை குறிவைத்தே தாக்குதல்களை நடத்தி வருவதாகவும், இந்தத் தாக்குதலுக்கும் அல்கொய்டா அமைப்பிற்கும் தொடர்பிருக்கலாம் என்றும் அமெரிக்க அதிகாரிகள் தெரிவித்தனர்.

## உலக நோக்கு

## வெஸ்பாங் பிரதேசத்திலுள்ள இரு வைத்தியசாலைகளுக்குள் திடீரெனப் புகுந்த இஸ்ரேலியப் படையினர் இரண்டு போராளிகளை கைதுசெய்தனர்!

(காஸா)

சனிக்கிழமை பலஸ்தீன வெஸ்பாங் பகுதியில் அமைந்துள்ள நபுலாஷ் பிரதேசத்தின் இரண்டு வைத்தியசாலைகளுக்குள் திடீரெனப் புகுந்த இஸ்ரேலியப் படையினர், அங்கு தீவிர சிகிச்சைப் பிரிவில் சிகிச்சை பெற்றுவந்த ஒருவர் உட்பட இரண்டு பலஸதீனப் போராளிகளைக் கைதுசெய்துள்ளனர்.

அதேவேளை, மற்றைய துப்பாக்கிதாரியும் வைத்தியசாலையில் வைத்துக் கைதுசெய்யப்பட்டார்.


ஹமாஸ் அமைப்பைச் சேர்ந்த கலீட் ஹமட் என்ற போராளி வைத்தியசாலையில் தீவிர சிகிச்சைப் பிரிவில் சிகிச்சை பெற்றுக்கொண்டிருந்தவேளை, திடீரெனப் புகுந்த இஸ்ரேலியப் படையினர் அவரின் உடலில் இணைக்கப்பட்டிருந்த மருத்துவ உபகரணங்களை பலவந்தமாக அகற்றிவிட்டு, அவரைக் கைதுசெய்து அம்புலன்ஸ் வண்டியில் கொண்டு சென்றதாக, அந்த வைத்தியசாலையில் கடமைபுரியும் டாக்டர் அனான் அப்துல் ஹர் தெரிவித்தார்.

இதேவேளை, வைத்தியசாலையில் கைதுகளை மேற்கொள்வது சர்வதேச சட்டங்களுக்கு முரணானது என, பலஸ்தீன அதிகாரிகள் கண்டனம் தெரிவித்துள்ளனர்.

ஆனால், ஆரோக்கியமான தீவிரவாதிகளுக்கு வைத்தியசாலையில் புகலிடம் கொடுப்பது சர்வதேச சட்டத்திற்கு முரணானது என, இஸ்ரேல் தெரிவித்துள்ளது.



இஸ்ரேலியப் படையினரின் தாக்குதலில் கொல்லப்பட்ட தனது கணவனின் இறுதிச் சடங்கில் ஆத்திரத்துடன் கதறியழும் பலஸ்தீனிய பெண் ஒருவரை படத்தில் காணலாம்.



அமெரிக்காவின் கலிபோர்னியா மாநிலத்தில் ஏற்பட்டுள்ள பெரும் காட்டுத் தீயை அணைக்க இந்த விமானமும் போராடுகிறது.

## ஆப்கானின் தென்மாகாணத்தில் அமெரிக்கா விமானத் தாக்குதல்!

### தலிபான் போராளிகள் 22 பேர் பலியென அறிவிப்பு

(காபூல்)

ஆப்கானிஸ்தானின் தென்பகுதியான பர்திகா மாகாணத்தில் அமெரிக்கப்படையினர் நேற்று நடத்திய வான் தாக்குதலில் 22 இற்கு மேற்பட்ட அல்கொய்டா போராளிகள் கொல்லப்பட்டதாக அமெரிக்கா தெரிவித்துள்ளது.

இதேவேளை, பாகிஸ்தானின் எல்லைப்பகுதியான சிக்கினில் கடந்த கடந்த சனிக்கிழமை அமெரிக்கப் படையினரின் தளம்மீது தலிபான் போராளிகள் றொக்கட் தாக்குதல் மேற்கொண்டதாகவும், இதன்போது அமெரிக்க வான்படையினர் உதவிக்கு அழைக்கப்பட்டதாகவும் தெரிவிக்கப்படுகிறது. இத்தாக்குதலின் போது - இரண்டு அமெரிக்கப் படையினர் கொல்லப்பட்டதாக ஊர்ஜிதப் படுத்தப்படாத செய்திகள் தெரிவிப்பதாக றொய்ட்டர் தெரிவித்துள்ளது.

## கொலம்பியாவில் காட்டுப் பகுதியில் வைத்து கடத்தப்பட்ட உல்லாசப்பயணிகளை விடுவிக்க கடத்தல்காரர் இணக்கம்

கொலம்பிய காட்டிற்குள் உல்லாசப் பிரயாணம் மேற்கொண்ட வேளை - செப்ரெம்பர் மாதம் 12 ஆம் திகதி கடத்தப்பட்ட ஏழு பேரையும் விடுவிப்பதற்கு தேசிய விடுதலைப்படை இணக்கம் தெரிவித்தது.

கடத்தப்பட்டவர்களில் 4 இஸ்ரேலியர்களும், ஜேர்மனைச் சேர்ந்த ஒருவரும், பிரித்தானியர் ஒருவரும் தேசிய விடுதலைப்படையினரிடம் உள்ளனர்.

பணயக் கைதிகளை விடுவிப்பதற்கு சிறையில் இருக்கும் தமது அமைப்பைச் சேர்ந்த அங்கத்தவர்களை விடுவிக்கவேண்டும் என்று, தேசிய விடுதலைப்படை கோரியிருந்தது. இதற்கு கொலம்பிய ஜனாதிபதி அல்வரோ யுரிப் சம்மதம் தெரிவித்ததையடுத்தே, உல்லாசப் பயணிகளை விடுவிப்பதற்கு தேசிய விடுதலைப்படை இணங்கியுள்ளது.

இதனையடுத்து, பிசப் மெண்டலின் என்பவர் இருதரப்புகளுக்குமிடையில் நடுவராகப் பணிபுரிந்து பணயக் கைதிகளை விடுவிப்பதற்கான முயற்சிகளில் ஈடுபட்டுவருகின்றார்.

பணயக்கைதிகள் - ஐ.நா அதிகாரி, கத்தோலிக்க மதத்தலைவர் மற்றும் இரு தீவிரவாத அமைப்புக்களின் தலைவர்கள் முன்னிலையில் விடுவிக்கப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

## கத்தோலிக்க மதகுருமார் பன்னிரண்டு பேர் சீன அதிகாரிகளால் கைது செய்யப்பட்டனர்

சீன அதிகாரிகளால் பன்னிரண்டு கத்தோலிக்க மதகுருமார்கள் கைதுசெய்யப்பட்டிருப்பதாக, அமெரிக்காவிலுள்ள கார்டினல் ஹங் என்ற மத அமைப்பு குற்றஞ்சாட்டியுள்ளது.

சீனாவின் கபெய் மாகாணத்தில் கடந்த 2 ஆம் திகதி நடைபெற்ற கத்தோலிக்க மாநாட்டிற்குச் சென்ற கத்தோலிக்க மதகுருக்களே கைதுசெய்யப்பட்டிருப்பதாக, அந்த அமைப்புத் தெரிவித்தது.

இந்த மாநாட்டுக்கு வத்திக்கானுடன் எதுவித தொடர்புமற்ற. கத்தோலிக்க தேசப்பற்றாளர் என்ற அமைப்புக்கு மட்டுமே அனுமதி வழங்கப்பட்டது.

இதேவேளை, அண்மையில் இந்தப் பிரதேசத்திலுள்ள கத்தோலிக்க தேவாலயம் ஒன்றும் நிர்மூலமாக்கப்பட்டுள்ளது.

சீனாவின் சட்டதிட்டங்களுக்கு மாறாக இயங்கும் கத்தோலிக்கத் தேவாலயங்களில் கோடிக்கணக்கானவர்கள் பிரார்த்தனையில் ஈடுபட்டு வருவதாகவும், மதச் சுதந்திரத்தை நசுக்கும் சீனாவின் கொள்கைக்கு ஜனநாயக நாடுகள் எதிர்ப்புத் தெரிவிக்கவேண்டும் எனவும் கார்டினல் ஹங் அமைப்பின் தலைவர் ஜோசப் குங் கேட்டுள்ளார்.

நமது ஈழநாடு
The Namathu Eezhanadu
The Leading Daily of Tamils' Homeland

# இந்திய மீனவர்கள் பதினைந்து பேரும் ஊர்காவற்றுறை நீதிமன்றால் விடுதலை

(யாழ்ப்பாணம்)

இலங்கை கடற்பரப்பில் அத்துமீறி மீன்பிடித்துக்கொண்டிருந்தவேளை இலங்கை கடற்படையினராலும், உள்ளூர் மீனவர்களாலும் கைது செய்யப்பட்டிருந்த 48 இந்திய மீனவர்களில் மேலும் 15 பேர் ஊர்காவற்துறை நீதிமன்றத்தால் நேற்று விடுதலை செய்யப்பட்டனர்.

சட்டமா அதிபர் திணைக்களத்தால் விடுக்கப்பட்ட அறிவுறுத்தலையடுத்தே ஊர்காவற் துறை நீதிவான் அ.பிறேம்சங்கர் 15 மீனவர்களையும் விடுதலை செய்ததுடன் அவர்களது மீன்பிடி இழு வைப் படகுகளையும் மீனவர்களிடம் கையளிக்க உத்தரவிட்டார்.

அதேநேரம் சட்டமா அதிபரின் பணிப்புக்கமைய பருத்தித்துறை நீதிமன்றத்தால் ஒருவருடமாக மூவர் விடுதலை செய்யப்படவில்லை. இவர்கள் அனைவரையும் அவர்களது படகுகளையும் இலங்கை கடற்படை ஊடாக இந்திய கடற்படையிடம் கையளிப்பதற்கான ஏற்பாடுகளை சிறைச்சாலை அதிகாரிகள் மேற்கொண்டுள்ளனர்.

## நாற்சந்தி

அண்மையில் தென்னிலங்கையில் ஒரு பெண்... அதுவும் ஒரு தாய் தன் கணவனுக்கு போதைவஸது வாங்கப் பணம் இல்லை எனபதற்காக தான் பெற்ற குழந்தையை மிகவும் சொற்ப பணத்துக்கு விற்றார் என்ற செய்தியை ஊடகங்களில் படிக்க நேர்ந்தது.

இதற்கு என்ன தலைப்பு கொடுப்பது? 'பதிபக்தி' என்று கொடுக்கலாமா என்று, எனது நண்பர் ஒருவர் அப்போது கேட்டார்...

அப்படியானால் தாய்ப்பாசத்திற்கு அர்த்தமில்லாமல் போய்விடுமே என்றேன் நான்.

ஆனால், யாழ்ப்பாணத்தில் ஒரு தந்தை தன் ஏழுமாதப் பெண் குழந்தையை 250 ரூபாவுக்கு விற்கமுயன்ற செய்தி நேற்றுமுன்தினம் ஊடகங்களில் வெளியானபோது மனது 'திக்' என்றது.

இதற்குக் காரணம் என்ன? வறுமையா? பெண் குழந்தை என்ற வெறுப்பா? அல்லது ஏதேனும் போதைத் தேவையா? எதுவானாலும் ஒன்று மட்டும் தெரிகிறது...

மனிதம் செத்துக்கொண்டுவருகிறது... மனித இயல்புகள் மனிதனிடம் அற்றுவருகிறது... அவ்வளவுதான்!

உயிரின் பெறுமதி அதுவும் கள்ளமில்லா ஒரு குழந்தையும் சொற்ப ரூபாய்களுக்குள் அடங்கி வடுகிறதா?

குழந்தைகள் இல்லாமல் தவிக்கும் தம்பதியினரின் ஏக்கமுகங்கள் நினைவில் வரவே செய்கிறது.

'நாம' எங்கே போய்க்கொண்டிருகிறோம்?

## ஜனாதிபதி...

தெரிவித்தனர்.

மேஜர் ஜெனரல் ரெலவ்சனுக்குப் பதிலாக புதிய கண்காணிப்புக் குழுத் தலைவர் ஒருவரை நியமிக்க உடனடி நடவடிக்கை எடுத்து, சமாதான முயற்சிகள் தொடர்பான ஒப்பந்தத்தில் எந்தப் பிரச்சினைகளும் இன்றி பேணப்பட நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என்று ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்காவின் செயலகம் நேற்றுமுன்தினம் வெளியிட்ட அறிக்கையில் கூறப்பட்டிருந்தது குறிப்பிடத்தக்கது.

## மின்சாரம் தாக்கி சிறுவன்...

சாரத்தால் தாக்கப்பட்டு, போதனா வைத்தியசாலைக்கு கொண்டு செல்லும் வழியில் உயிரிழந்தார்.

இந்த இடத்தில் குறிப்பிட்ட நபரொருவர் சட்டவிரோதமாக மின்சாரத்தினைப் பெற்று வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது. இவ்வாறு பெறப்பட்ட சட்டவிரோத மின்சாரம் தாக்கியதனாலேயே, மேற்படி சிறுவன் உயிரிழந்ததாக கூறப்படுகிறது.

அராலி மேற்கில் சட்டவிரோத மின்பாவனை நாளுக்கு நாள் அதிகரித்து வருவதனால், சம்பந்தப்பட்டவர்கள் இதற்கெதிராக கடும் நடவடிக்கை எடுக்கவேண்டும் என, அப்பகுதி மக்கள் எதிர்பார்க்கின்றனர்.

## பேச்சுக்களில்...

பொலிஸ் அத்தியட்சகர் உபாலி ஹேவகே, ராணுவத் தலைமையகத்தைச் சேர்ந்த சூல செனவிரதன ஆகியோரும், முஸ்லிம்கள் தரப்பில்-கிண்ணியா ஜமாயத்துல் உலமாசபை உதவிச் செயலாளர் எம்.ஏ. ஜாகீன் தலைமையில், 12 முஸ்லிம் பிரதிநிதிகளும் கலந்துகொண்டனர்.

இதன்போது, உள்துறை அமைச்சர் ஜோன் அமரதுங்க தெரிவிக்கையில், சமாதானமானது மிகக் குறுகிய காலத்தில் வெற்றியடையும் என எவரும் எதிர்பார்க்கமுடியாது. 20 வருட காலமாக இன முரண்பாடுகளுடன் கூடிய சிக்கல் மிகுந்த இனப்பிரச்சினையை, திடீரென முடிவுக்குக் கொண்டுவர முடியாது. சகல இன மக்களும் தங்களிடையே புரிந்துணர்வுடன் நடந்துகொள்வதன் மூலம், நிரந்தர சமாதானத்தை எட்ட முடியும். முஸ்லிம்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் தொடர்பாக உள்துறை அமைச்சின் செயலர் ஊடாக, பிரதமருக்கு தெரிவிக்கவுள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

கிண்ணியாவில் நடைபெற்ற சம்பவத்தில் பாதிக்கப்பட்டவர்களுக்கான நட்டஈட்டினை பெற்றுக் கொடுப்பது தொடர்பாகவும், குரங்கு பாஞ்சான் பகுதியில் முஸ்லிம்கள் விவசாயம் செய்வது தொடர்பாகவும் பிரதமருடன் கலந்துரையாடவுள்ளதாகவும், முஸ்லிம் - தமிழர்களுக்கிடையிலான பிணக்குகளை பெரிதாக்காது, போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழுவின் அனுசரணையுடன் தீர்வை எட்ட அனைவரும் ஒத்துழைக்க வேண்டும் எனவும் அவர் தெரிவித்தார். (10)

## ரெலவ்சனின்...

தக் கண்காணிப்புக் குழுவின் தலைவரின் கட்டளைகளை கடைப்பிடிக்க வேண்டிய அவசியமில்லை என, முப்படைத் தளபதிகளுக்கும் ஜனாதிபதி அறிவித்ததைத் தொடர்ந்தே, விடுதலைப் புலிகள் இந்த முடிவுக்கு வந்திருப்பதாக தெரிவித்துள்ளதுடன், திருமலை குரங்குபாஞ்சான் முகாம் தொடர்பாக இனிவரும் காலங்களில் போர்நிறுத்தக் கண்காணிப்புக்குழுவின் பணிப்புக்கள் நடைமுறைப்படுத்தப்படாது எனவும் அவர்கள் தெரிவித்துள்ளனர்.(01)

## அரைக்கும் ஆலை பொயிலர்...

வெடித்துச் சிதறியது. இதன் போது, அங்கு நின்ற தொழிலாளர்களில் ஒருவரும், அவரைப் பார்க்க வந்த அவரது ஆறுமாதப் பெண் குழந்தையும் பலியாக மிகுதி நான்கு தொழிலாளர்கள் கடும் எரிகாயங்களுக்கு உள்ளாகினர்.

இந்தச சம்பவத்தில் மட்டக்களப்பு கரவெட்டியைச் சேர்ந்த 3 பிள்ளைகளின் தந்தையான இ.சாந்தகுமார், அவரது ஆறு மாதக் குழந்தையான சா.தர்ஷிகா ஆகியோர் பலியானவர்களாவர். மாவடிவேம்பு சித்தாண்டியைச் சேர்ந்த நிமலன், மட்டககளப்பு கரவெட்டியைச் சேர்ந்த புண்ணியமூர்த்தி, உன்னிச்சையைச் சேர்ந்த குமரகுரு, நிந்தவூரைச் சேர்ந்த எம்.நவாஸ் ஆகிய நான்கு தொழிலாளர்களுமே கடும் எரிகாயங்களுக்கு உள்ளாகிய நிலையில் நிந்தவூர் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு, அங்கிருந்து அம்பாறை வைத்தியசாலைக்குக் கொண்டுசெல்லப்பட்டனர். பின்னர் அங்கிருந்து இவர்கள் கண்டி வைத்தியசாலைக்கு நேற்றுமாலை அனுப்பிவைக்கப்பட்டனர்.

இந்தச் சம்பவத்தில் பரிதாபகரமாக உயிரிழந்த ஆறுமாத குழந்தையான தர்ஷிகா தனது தாயாருடன் தந்தையிடம் பொருட்கள் வாங்குவதற்காக பணம் வாங்கிச் செல்ல வந்தவேளையிலேயே இந்தச் சம்பவம் நடைபெற்றது.

இந்தப் பொயிலர் வெடித்ததினால் அரைக்கும் ஆலையிலிருந்த பெருமளவான கட்டடங்கள் யாவும் தகர்ந்து போயுள்ளதுடன், அங்கு நின்ற இரண்டு தென்னைகளும் விழுந்துள்ளன. பொயிலரின் ஒரு பகுதி அயலில் உள்ள வீடொன்றில் இருந்து மீட்கப்பட்டுள்ளது.

இதேவேளை இந்தச் சம்பவத்தில் எரிகாயங்களுக்கு உள்ளான எம்.நவாஸ் கவலைக்கிடமான நிலையில் கண்டி வைத்தியசாலையில் மேலதிக சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளார். (07)

## தாயகத்தின்...

போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழு தொடர்பாக சந்திரிகா எழுப்பியுள்ள பிரச்சினை பற்றிக் கருத்துத் தெரிவிக்கையில்,

தற்போது நோர்வே அரசுடன் கருத்துக்களைப் பரிமாறிக்கொண்டிருப்பதால், அது தொடர்பாக கருத்துத் தெரிவிப்பது பொருத்தமற்றது எனவும், ஊடகங்களின் செய்திகளை மட்டும் வைத்துக்கொண்டு இதற்குக் கருத்து சொல்வது, தற்போதைய சமாதான சூழ்நிலையை நெருக்கடி நிலைக்குத் தள்ளிவிடும் என்ற காரணத்தால், இது பற்றிக் கருத்து எதுவும் தெரிவிக்கமுடியாது எனவும் அவர்மேலும் தெரிவித்தார்.

## தொண்டமான்...

இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் தலைவர் ஆறுமுகம் தொண்டமான், கட்சியின் துணைத்தலைவர் எம்.எஸ. செல்லச்சாமி மற்றும் நாடாளுமன்ற உறுப்பினர்கள் பலரும் கலந்துகொண்டனர்.

நேற்று இடம்பெற்ற இந்தச் சந்திப்பில் - பல விடயங்கள் ஆராயப்பட்டதாகவும், இது பயனுள்ள சந்திப்பாக அமைந்தது எனவும், அமைசசர் ஆறுமுகம் தொண்டமான் தலைமையிலான குழுவினர் தெரிவித்தனர்.

இந்தச் சந்திப்பில், விடுதலைப் புலிகளுக்கு 5 வருடகால நிர்வாகப் பொறுப்பை வழங்கவேண்டும் என்ற இ.தொ.காவின் மறைந்த தலைவர் அமரர் சௌமியமூர்த்தி தொண்டமானின் கொள்கையை என்றென்றும் இ.தொ.கா பின்பற்றும் என்றும்,

மலையக மக்களின் பிரஜாவுரிமையை இ.தொ.கா வென்றெடுத்தது போல், வடக்கு - கிழக்கு தமிழ்மக்களுக்காகவும் முன்னெடுத்துச் செல்லும் இடைக்கால நிர்வாக முயற்சிக்கு எமது கண்டி மாநாட்டிலும், தேசிய சபைக் கூட்டத்திலும் முழு ஆதரவு அளிக்கப்படும் என்ற உறுதியை, ஏற்கனவே நாம் எடுத்துள்ளோம் என்பதையும் அமைச்சர் வலியுறுத்தினார்.

## மஹஜன சம்பத பெறுபேறுகள்

சீட்டிழுப்பு இல: 1559 திகதி: 28.10.2003

வெற்றி இலக்கங்கள்

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| C | 5 | 7 | 0 | 5 | 0 | 3 |

## மரண அறிவித்தல்

### சிறிநிவாசக் குருக்கள் சாரம்பாள் அம்மா

புங்குடுதீவு சிறிநிவாசக் குருக்கள் சாரம்பாள் அம்மா 25.10.2003 சனிக்கிழமை வவுனியாவில் காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற சிறிநிவாசக் குருக்கள் (புங்குடுதீவு பெரியகுளம் வீரகத்தி விநாயகர் ஆலய பிரதம குரு) அன்பு மனைவியும், பரமேஸ்வரி அம்மா (கனடா), ரகுநாதக் குருக்கள் (சிவன் கோயில், வவுனியா), நாகேந்திரக் குருக்கள் (சின்ன மணிஜயர், சிவன் கோயில், புங்குடுதீவு), சண்முகநாதக் குருக்கள் (கனடா), திருஞானசம்பந்தசர்மா (பிள்ளையார் கோயில், மாங்குளம்), கிருஷ்ணலீலா (கொழும்பு), சர்வானந்தக் குருக்கள் (கனடா), ஆனந்தசர்மா (கனடா), ஆகியோரின் அன்புத் தாயாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் வவுனியா வெளிக்குளம் இந்து மயானத்தில் 30.10.2003 வியாழக்கிழமை பகல் 10 மணிக்கு நடைபெறும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

*நீலலோஷனி (கொழும்பு)*
*புவனேஸ்வரக் குருக்கள்*
*(கனடா)*

*(சி-1743)*

தகவல்:
குடும்பத்தினர்.

நமது ஈழநாடு நடாத்தும்

5 ஆம் ஆண்டு புலமைப்பரிசில்
2003 பரீட்சைக்குத் தோற்றும்
மாணவர்களுக்கான
இலவச முன்னோடிக் கருத்தரங்கு

இடம்:- யாழ். வேம்படி மகளிர் உயர்தரப்பாடசாலை மண்டபம்.
காலம்:- 2003-11-02 ஞாயிற்றுக்கிழமை காலை 8.00 மணி தொடக்கம்.

மேற்படி பரீட்சைக்குத் தோற்றும் மாணவ, மாணவிகளை அன்புடன் அழைக்கின்றோம்.

அனுசரணை வழங்குவோர்

ஹரிஹரணன் பிறிண்டேர்ஸ்

ஆல்சிலோன் டிஸ்ரிபியூட்டர்ஸ்

SEYLAN செலான் வங்கி
டிக்கிரி கணக்கு
புதிதாக டிக்கிரிக் கணக்கு ஆரம்பிக்க விரும்புபவர்கள் கருத்தரங்கு மண்டத்தில் ஆகக்குறைந்தது 100 ரூபா செலுத்தி ஆரம்பிக்க வசதி செய்யப்பட்டுள்ளது.

BANK OF CEYLON
இலங்கை வங்கி
தேசத்தின் வங்கியாளர்

யாழ் நகரில்
விஸ்ட்டா விஷன் டிஜிட்டல் கலர் லாப்..!!!!!
1. பழுதடைந்த பழைய படங்களை நவீன முறையில் புதுப்பித்து மெருகூட்டல்
2. நெகட்டிவ் இல்லாமல் படத்தில் இருந்து படத்தைப் பிரதியாக்கம்செய்தல்
3. டிஜிட்டல் கமராவில் இருந்து எடுக்கப்படும் படங்களைப் பிரதியாக்கம் செய்தல்
4. அல்பத்திற்கான முகப்பு அட்டைப்படங்களைத் தயாரித்தல்
ஆகிய சேவைகளை வாடிக்கையாளர்களின் நன்மை கருதி விஸ்தரித்துள்ளது.
Vista Vision
விஸ்ட்டா விஷன் டிஜிட்டல் கலர் லாப்,
52,பலாலி வீதி,யாழ்ப்பாணம்.
☎:021-2225187
FUJIFILM

இப்பத்திரிகை இல. 267, நாவலர் வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள நமது ஈழநாடு அச்சகத்தில் 29.10.2003 அன்று பொன்னுத்துரை குருதேவ் அவர்களால் அச்சிட்டு வெளியிடப்பட்டது.